வளர்மதி.

- தாகூர் -

வளர்மதி

ரவீந்திரநாத தாகூர்

★

தமிழில் :

எஸ். லலிதா, M. A.

★

ஸ்டார் பப்ளிகேஷன்ஸ்
No. 5, புதுச்சந்தை தெரு, காரைக்குடி.

டல்லவா ? இயற்கையோடு இதயம் ஒன்றி வாழும் அவர்கள், எதிலுமே நாம் பார்க்காத காட்சிகளையெல்லாம் பார்க்கிறார்கள் ; கேட்காத ஒலிகளை யெல்லாம் கேட்கிறார்கள். அத்தகைய கவிதா உள்ளத்தோடு குழந்தையின் லீலை களைப் பார்த்திருக்கும் கவி ரவீந்திரருக்குத் தோன்றியிருக்கும் புதுமைகள்தான் எத்தனை யெத்தனை! அந்தப் புதுமைகளையெல்லாம் காட்டுவதன் மூலம், அவர் நம்மை ஏதோ ஓர் இனந் தெரியாத இன்ப உலகத்துக்கே அல்லவா இழுத்துச் சென்றுவிடுகிறார் !

இதயத்தில் தோன்றும் உணர்ச்சிகளை வெளியிடுவதற்குத் தாய்மொழியை விடச் சிறந்த மொழி வேறு எதுவும் இருக்கமுடியா தென்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. ஆகவே, கவிதாகூரும் முதலில் 'வளர்மதி'யைத் தமது தாய்மொழியான வங்கத்திலேயே இயற்றினார். பின்னால் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலக மக்கள் அனைவருக்கும் வழங்கினார். அந்த ஆங்கில மொழிபெயர்ப்பின் தமிழாக்கம்தான் இந்த 'வளர்மதி.' தமக்கே உரியதான எளிய இனிய நடையில் ஸ்ரீமதி லலிதா வளர்மதியைத் தமிழ் படுத்தியிருக்கிறார். கவிதா ரஸத்தோடு தெள்ளத் தெளிந்த தமிழில் அவருடைய நடை துள்ளியோடுகிறது. அதன் மூலம் சாதாரண வசன நூலாக அமைந்திருக்க வேண்டிய 'வளர்மதி' வசன காவியமாகவே மலர்ந்திருக்கிறது !

'வளர்மதி'—எவ்வளவு அழகான தலைப்பு! எவ்வளவு அர்த்த புஷ்டியுள்ள தலைப்பு! சந்திரன் வளர்வது போலக் குழந்தையும் வளர்கிறதாம்—அறிவிலும் அழகிலும், உயிரிலும் உணர்ச்சியிலும், தெய்வத் தன்மையிலும்.

குழந்தையின் மழலையில் ஒரு தனி இனிமை; குழந்தையின் பொடிச்சிரிப்பில் ஒரு தனி இன்பம்; குழந்தை சுழற்றும் மத்தாப்பில் உலகமே சுழன்றோடுகிறது. காகிதப் படகில் குழந்தை உள்ளம் படைத்த ஷெல்லி உலகோர் கண்டறிய முடியாத உண்மைகளைக் கொட்டியனுப்பினன்; அதே காகிதப் படகில் தாகூர் குழந்தையின் இதய ஒலிகள் அத்தனையையும் சித்திரிக்கிறார்.

விண்ணின் முத்தத்தையே நமக்கு வாங்கித் தந்த பெருமை குழந்தையைச் சார்ந்தது என்று கூறி, தாகூர் நம்மைத் திகைக்க வைக்கிறார்!

'வளர்மதி'யில் கவிதைப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகிறது; உணர்ச்சி உயர்ந்து வானவில்லின் வர்ண ஜாலங்களை யெல்லாம் நம் கற்பனை உலகில் சிருஷ்டித்து விடுகிறது; ஜீவராசிகளின் ஜீவரஸம் எங்கும் ததும்பி வழிந்தோடுகிறது; இயற்கை, அன்பு ததும்பும் அன்னையாகவே நமக்குக் காட்சியளிக்கிறாள்!

ஆஹா! குழந்தையோ, குழந்தை! தாய்மையின் கிரீடம், குழந்தை! காதலின் அற்புத ரஸம், குழந்தை! அன்பில் விளையும் அமுதம் குழந்தை? உலக விந்தையல்லவா, குழந்தை?

குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்தில்தானே ?

ஆம்! ஆம்! ஆம்!

உன்னத இலட்சியங்கள் கொண்ட அழகனும் அழகியும் உள்ளும் புறமும் ஒன்றிக் கலந்து, அற்புதமான குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டுமென்று ஜெர்மன் ஞானியான 'நிட்ஷி' உணர்ந்தே கூறியிருக்கிறார்.

ஆகவே, இலட்சியத்திருமணத்தின் பலன் இன்பக் குழந்தை! நல்ல குழந்தை! அற்புதமான குழந்தை!—ஆம்!

* * *

தாகூரின் 'வளர்மதி' யை ஆழ்ந்து அறிந்து அனுபவிக்க, 'தேவி'யின் 'குழந்தை' யையும், 'தாலாட்'டையும், 'சந்திர'னையும் படித்தால் போதும்.

"ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ!

மாமணியோ முத்தோ
மரகதமோ மன்னவர்தம்

தாம முடிமீது
தயங்கும் வயிரமதோ!

முல்லை நறுமலரோ
முருகவிழ்க்கும் தாமரையோ

மல்லிகைப் பூவோ
மருக்கொழுந்தோ சண்பகமோ! ***

நெஞ்சிற் கவலையெல்லாம்
நீங்கத் திருமுகத்தில்

புன்சிரிப்பைக் காட்டிஎம்மைப்
போற்றும் இளமதியோ! ***

கண்ணுறங்கு கண்ணுறங்கு!
கண்மணியே கண்ணுறங்கு!

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ! ***

* * *

பாரதியின் 'பாப்பா பாட்டு' மிக மிக அருமையாக அமைந்திருக்கிறது. 'கண்ணம்மா என் குழந்தை'-கண்ணன், என் விளையாட்டுப் பிள்ளை'-இந்த இரண்டுபாடல்களையும் 'பைரவி' ராகத்தில் பாடும்போது, நாம் உணர்ச்சியின் சிகரத்தையே எட்டிப் பிடித்து விடுகிறோம்—குழந்தையின் அற்புதச் சித்திரம் நம் அகக் கண்ணில் மின்னிப் பளிச்சிடுகிறது!

"பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா !
பேசும் பொற் சித்திரமே !
அள்ளி யணைத்திடவே—என் முன்னே
ஆடி வருந் தேனே ! ***

இன்பக் கதைக ளெல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ ?
அன்பு தருவதிலே—உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ ? ***

மார்பி லணிவதற்கே—உன்னைப்போல்
வைர மணிக ளுண்டோ ?
சீர்பெற்று வாழ்வதற்கே—உன்னைப்போல்
செல்வம் பிரிது முண்டோ ?"

* * *

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 'பெண் குழந்தை தாலாட்டு' என்னும் பாடல் அற்புதமாக இயற்கையின் எழிலேயும், பெண்மையின் வெற்றிக் கொடியையும் எடுத்துக் காட்டுகிறது :

" ஆராரோ ஆரிரோ, ஆரிரோ ஆராரோ !
ஆராரோ ஆரிரோ, ஆரிரோ ஆராரோ !
சோலை மலரே ! சுவர்ணத்தின் வார்ப்படமே
காலைஇளஞ் சூரியனைக் காட்டும் பளிங்குருவே !
மின்னல் ஒளியே, விலைமதியா ரத்தினமே !
கன்னல் பிழிந்து கலந்த கனிச் சாறே !"

* * *

கவி ரவீந்திரநாத தாகூரின் 'வளர் மதி'யை உலக பாஷைகளிலெல்லாம் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

தமிழில் இப்பொழுதுதான் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அருமையான நூலில், குழந்தையின் கண்களிலும் இதயக் கடலிலும் உலகம் பிரதிபலிக்கிறது; நிகழ்ச்சி

களும் சொற்களும், படங்களாகவும், இன்ப லீலைகளாகவும் சுழன்று சுழன்று வருகின்றன. தாகூரின் ஹாஸ்ய மத்தாப்பும் அங்கங்கே ஒளியோவியமாக மின்னலிடுகிறது. இலக்கிய இன்பத்தில் மூழ்கித்திளைக்க இவை போதாதா என்ன?—படித்துப்பாருங்கள்!

1-7-55. **வி. ஆர். எம். செட்டியார்.**

*மேல் நாட்டுக் கவிஞர்களின்
பாடல்களில் சில :*

குழந்தை மகாராஜா!

1

குழந்தை மகாராஜா
அரியாசனந் தமர்ந்து
தனிக் குடைக்கீழ்
அரசு புரிகிறார்!

2

அவர் அரியாசனம் எது?
அன்னையின் மெல்லிய மடி!
அவர் தவிர யாரும்
அதில் அமர முடியாது!

3

அவர் அரசு எது?
அன்னையின் இதயக் கமலம்;
அது முழுதும் அவருக்கே சொந்தம்;
அங்கே அரச பக்தி ததும்பும்!

4

அவர் சட்டங்கள் அனைத்தும்
தெய்விக மானவை ;
அவ்வளவு சுலபமானவை ;
அன்பு மய மானவை !

லாரன்ஸ் ஆல்மா டாடிமா

குழந்தைகள்

1

குழந்தைகளே! என்னிடம் வாருங்கள்!
உங்கள் விளையாட்டைப் பார்க்கப் பார்க்க,
என்னைக் கலக்கிய சங்கைகள் எல்லாம்
மாயமாய் மறைந்துவிடுகின்றன!

2

ஞாயிறு நோக்கும் சாளரம் திறமின்!
தூக்கணாங்கள் பாடும் ஓடைகள் ஒளிரும்!

3

பானுவும் பட்சிகளும் உங்கள் இதயத்திலே!
ஓடையின் நீரோட்டம் உங்கள் கருத்திலே!
என் இதயத்திலோ, இலையுதிர் காற்று!
பனியும் விழ ஆரம்பம்!

4

குழந்தைகள் மட்டும் இல்லாவிடில்,
உலகத்தால் நமக்கு என்ன பயன்?
அதிகமாக அஞ்சுவோம்!

5

இனிய மென் சாறு,
ஒளியும் காற்றும் பருகி
மரமாய் இறுகும்,
அடி மரத்துக்குக் கிடையாத

ஒளியும் காற்றும்
இலைகளால் கிடைக்கும் ;
அரணியத்துக்கு இலைகள்—அவைபோல்
அவனிக்குக் குழந்தைகள் '

6

குழந்தைகளே, என்னிடம் வாருங்கள் !
உங்கள் ஒளியுலகில் உலவும்
பட்சியும் காற்றும் பாடுவதை
என் செவியில் கூறுங்கள் !

7

உங்கள் மெய் தீண்டும் இன்பம்,
உங்கள் பார்வையின் ஆனந்தம், இவைஎங்கே?
எங்கள் நூல்களின் ஞானம்,
எங்கள் அறிவின் சூழ்ச்சிகள், இவை எங்கே ?

8

உங்களைவிட உயர்ந்த பாடல்கள்
ஒருகாலத்திலும் பாடப்பட்டதில்லை.
நீங்கள் உயிருள்ள பாடல்கள்,
ஏனைய எல்லாம் இறந்தவையே !

— *லாங்பெலோ*

பொருளடக்கம்

*

வீடு

அஸ்தமனச் சூரியன் தன் கடைசிப் பொன்னொளியைப் போலப் பதுக்கிக் கொண்டிருந்த சமயத்திலே, வயற்காட்டின் நடுவே செல்லும் சாலையில் நான் தனிமையில் உலாவினேன்.

மாலை ஒளி படிப்படியாக இருளில் அமுங்கிக் கொண்டிருந்தது; கதிர் அறுக்கப்பட்டுப் பொலி விழுந்துவிட்ட பூமிதேவி மௌனம் பூண்டிருந்தனள்.

அச்சமயம் சற்றும் எதிர்பாராத விதமாக வான வெளியை நோக்கிக் கிளம்பிற்று, சிறுவனொருவனின் கீச்சுக் குரல். இருட்டில் அவனது உருவம் கண்ணுக்குப் புலப்படவில்லையென்றாலும், அவன் பாடிய கீதம் அந்திவேளையின் அமைதியிலே அவன் சென்ற பாதையை அறிவித்துச் சென்றது.

அதோ, வெட்ட வெளியின் அந்த விளிம்பிலே, கரும்புத் தோட்டத்துக்கப்பால் கரும்பசும் பலா, தென்னை, தண்ணி

டைக் கமுகு, வாழை இவை தரு நிழலிலே மறைந்து நின்றது அவன் கிராம வீடு.

நட்சத்திர ஒளியில் நான் சென்ற தனி வழியில் ஒரு கணம் தாமதித்து நின்றேன். நின்று, தொட்டில்களாலும், கட்டில்களாலும், அன்னையின் உள்ளங்களாலும் அந்தி விளக்குகளாலும், உலகத்தில் தங்களுக்குள்ள மதிப்பு என்ன வென்பபதையே அறியாத மகிழ்ச்சி நிறைந்த இளஞ் ஜீவன்களாலும், அலங்கரிக்கப்பட்டிருந்த எண்ணற்ற வீடுகளை, தன் இரு கைகளாலும் அணைத்த வண்ணம் நின்ற இருள் சூழ்ந்த பூமி என் முன் பரந்து நிற்கக் கண்டேன்.

*

கடற்கரையிலே !

முடிவற்ற உலகங்களின் கடற்கரையிலே குழந்தைகள் கூடுகின்றனர்.

எல்லையற்ற ஆகாயம் மேலே சலனமற்று இருக்கிறது. முடிவற்ற உலகங்களின் கடற்கரையிலே கூச்சலிட்டுக் கொண்டும் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டும் குழந்தைகள் கூடுகின்றனர்.

குழந்தைகள் தங்கள் வீடுகளை மணலினால் கட்டுகின்றனர்; வெற்றுச் சிப்பிகளை வைத்துக்கொண்டு விளையாடுகின்றனர்; உலர்ந்த சருகுகளைக் கொண்டு ஓடம் முடைகின்றனர்; அகண்ட ஆழ் கடலிலே ஆனந்தமாக அவற்றை மிதக்க விடுகின்றனர்.

நீந்தத் தெரியாத குழந்தைகள்; வலை வீசவும் அவை அறியா. முத்துக் குளிப்பவர்கள் நல் முத்துக்களைத் தேடிக் கடலடி செல்வார்கள்; வர்த்தகர்கள் கப்பலேறிக் கடலைத் தாண்டுவார்கள். குழந்தைகளோ கூழாங்கற்களைச் சேகரிக்கின்றன; சேகரித்து அவற்றைச் சிதறவடிக்

கின்றன. மறைந்து கிடக்கும் மாணிக்கத்தைக் குழந்தைகள் தேடிச் செல்வதில்லை; வலை வீசவுந் தெரியாது, அந்தக் குழந்தைகளுக்கு.

சிரிப்புடன் பொங்கி யெழுகிறது கடல்; மென்மையான ஒளியுடன் முறுவலிக்கிறது கடற்கரை. சேயின் தொட்டிலை ஆட்டும் தாய்போல மரண அலைகள் குழந்தையின் செவிகளில் விழும்படி பொருளற்ற தாலாட்டைப் பாடுகின்றன. குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுகிறது கடல்; வெளிறிய முறுவல் பூக்கிறது கடற்கரை!

பாதையில்லா வானத்திலே சூறைக் காற்று அலைந்து திரிகிறது; சுவடு தெரியாக் கடலிலே கப்பல்கள் மோதி யுடைகின்றன. காலன் உலா வருகிருன்; குழந்தைகள் விளையாடுகின்றன.

*

எங்கிருந்து ?

ஐ பாப்பாவின் கண்களைத் தொட்டுத் திரிகிறதே, தூக்கம்—அது எங்கிருந்து வருகிறதென்று யாருக்காவது தெரியுமா? —தெரியும். மின்மினிகளின் மங்கிய ஒளி மட்டுமே படும் கானக நிழல்களிலே தேவதைகள் வாழும் கிராமம் ஒன்றிருக்கிறதாம். அங்கே இரண்டு மாய மொட்டுக்கள் வெட்கத்துடன் தலைகவிழ்ந்து நிற்கின்றனவாம். அவற்றில்தான் குழந்தையின் துயில் நிலவுகிறது என்றொரு வதந்தி. அங்கிருந்தே துயில் வந்து பாப்பாவின் கண்களைத் தழுவி முத்தமிடுகிறது!

பாப்பா தூங்கும்போது அவன் இதழ்களிலே துடிக்கின்ற சிரிப்பு—அது எங்கிருந்து வருகிறதென்று யாருக்காவது தெரியுமா? தெரியும். பனித் துளிகளில் குளித்துக் கொண்டிருந்த அருணோதயக் கனவில், நொடியில் மறையும் இலையுதிர் கால மேகமொன்றின் விளிம்பை வளர் பிறையின் இளவெண் கிரணமொன்று தொட்டதாம். அவன் இதழ்களில் துடிக்கும் பொடிச் சிரிப்பு, அந்தக்கனவில் தோன்றிற்று என்றுதான் வதந்தி.

பாப்பாவின் அங்கங்களிலே மலர்ந்து மின்னுகின்ற மென்மையும் இனிமையும் நிறைந்த அந்தப் புதுமை—அது இத்தனை நாளும் எங்கே ஒளிந்திருந்ததென்று யாருக்காவது தெரியுமா? — தெரியும். தாய் இளமங்கையாக இருந்தபோது, மர்மமான இளமைக் காதலில் மௌனமாக அது அவள் இதயத்தை வளைத்து நின்றது—பாப்பாவின் அங்கங்களில் மலர்ந்து மின்னும் மென்மையும் இனிமையும் நிறைந்த அந்தப் புதுமை!

✱

குழந்தையின் தன்மை!

ஒரு பாப்பா மட்டும் மனம் வைத்தால் அவன் இந்த நிமிஷமே விண்ணுலகத்துக்குப் பறந்து செல்ல முடியும்!

அவன் காரணமில்லாமல் நம்மை விட்டு அகலாதிருக்கவில்லை.

தாயின் மார்பில் தலை சாய்த்துப் படுப்பதில் அவனுக்கு அளவற்ற ஆனந்தம். அவள் தன் பார்வையினின்று ஒரு கணம் மறைந்தாலும் அவன் அதைச் சகியான்.

பாப்பாவுக்குத் தெரிந்த விவேக வார்த்தைகள் எத்தனை எத்தனையோ! எனினும் அவற்றின் பொருளை அறியக் கூடியவர் இவ்வுலகில் மிகச் சிலர்தான்!

அவன் காரணமில்லாமல் பேசத் தெரியாதவன் போல நடிக்கவில்லை.

தாய்மொழியைத் தாயின் உதடசையக் கேட்டறியவே அவன் ஆசைப்படுகிறான். அதனால்தானே அவன் ஏதும்

அறியாதவன் போலக் காட்டி மகிழ்கின்றான்!

முன், பாப்பாவிடமிருந்த பொன்னும் நன்முத்தும் ஒரு பெருந் திரவியம்! இருந்தும், அவன் ஒரு பிச்சைக்காரனைப் போலவே இம் மண்ணுலகில் வந்து சேர்ந்தான்.

அவன் காரணமில்லாமல் இந்த மாறு வேஷத்தில் இங்கு வரவில்லை.

கண்ணான இந்த நிர்வாண ஆண்டி, கதியற்றவன்போலப் பாசாங்கு காட்டி, அம்மாவின் அன்புச் செல்வத்தை யெல்லாம் சுற்றிப் பறிக்கவே இவ் வித்தை செய்கின்றான்!

சின்னஞ் சிறு வளர்பிறை உலகில் அவன் எவ்விதப் பந்தமுமின்றிச் சுதந்திரமாகவே வாழ்ந்தான்.

காரணமில்லாமல் அவன் அந்தச் சுதந்திரத்தைப் பலி கொடுத்துவிட்டு இங்கு வரவில்லை.

தாயின் இதய மூலையில் எல்லையில்லாத ஆனந்தத்துக்கு இடமுண்டு என்பதை அவன் நன்கு அறிவான். அவன்

இன்பக் கரங்களிலே வாரியெடுத்து அணையப் பெறுவது, சுதந்திரத்தைவிட மேலான இன்பம் என்பதையும் அவன் அறிவான்.

இல்லை. பாப்பாவுக்கு அழவே தெரியாது. பூரண இன்பம் பொங்கும் நாட்டிலன்றோ அவன் வாழ்ந்திருந்தான்!

காரணமில்லாமல் அவன் கண்ணீர் சிந்தும் கலையைக் கற்கவில்லை.

தன் இனிய முகத்தில் தோன்றும் முல்லை முறுவலால் தாயின் ஆர்வம் நிறைந்த இதயத்தைத் தன்பால் இழுத்துக் கொண்டாலும், தன் சிறு துயர்களுக்காக அவன் அழுந் சின்னஞ் சிறு அழுகைகளால், தாயின் உள்ளத்தில் இரக்கமும் அன்பும் இரட்டிப்புப் பாச வலைகளாகப் பின்னிக் கொள்கின்றன.

கவனிப்பாரற்ற ஓர் அரிய காட்சி!

ஓகோ ஆகா! நீ அணிந்திருக்கும் அந்தச் சிறு சட்டைக்கு வர்ணமேற்றியது யார்? என் குழந்தாய், உன்னுடைய குஞ்சுக் கால்களுக்கு அந்தச் சிவப்புச் சராயை அணிவித்தது யார்?

தளர் நடையுடன் தள்ளாடிக் கொண்டும் தடுக்கி விழுந்துகொண்டும் நீ அதிகாலையில் விளையாடுவதற்காக முற்றத்துக்கு ஓடி வந்து விட்டாய்!

இருக்கட்டும்; உன்னுடைய சின்னஞ் சிறு சட்டைக்குச் சாயமேற்றியது யார், என் குழந்தாய்?

என்னை வாழ்விக்க வந்த சின்னஞ் சிறு உயிர் அரும்பே, நீ சிரிப்பதன் விந்தைதான் என்ன?

வாசற்படியில் நின்ற வண்ணம் உன் தாயார் உன்னைக் கண்டு புன்னகை பூக்கிறாள்! கைவளை குலுங்க அவள் தன் கைகளைத் தட்ட, நீ சின்னஞ்சிறு கோலைக்

கையிற் கொண்டு ஆயர் சிறுவனைப் போல நாட்டியமாடுகின்றாய்!

என் உயிரின் உறைவிடமாகிய சின்னஞ் சிறு அரும்பே, நீ சிரிக்கும் காரணம்தான் என்ன?

ஏ, பிச்சைக்காரா! உனது இரு கைகளாலும் தாயின் கழுத்தைக் கட்டித் தொங்கும் நீ, அவளிடம் என்ன கெஞ்சுகின்றாய்?

பேராசைப் பொடியனே, ரோஜா மலரை யொத்த உன் பொடிக் கைகளில் விண்ணினின்றும் இந்த உலகத்தையே கனிபோலக் கொய்து வைக்கலாமா?

ஏ, பிச்சைக்காரா! நீ என்ன யாசிக்கின்றாய்?

உன்னுடைய சதங்கை மணிகளின் கிண்கிணி நாதத்தை, வீசுங் காற்று ஆனந்த வெறியுடன் கொள்ளை கொண்டு செல்லுகிறது.

கதிரவன் சிரித்துக்கொண்டே நீ மஞ்சனமாடுவதை வேடிக்கை பார்க்கிறான்.

தாயின் அணைப்பில் உறங்கும் உன்னை வானம் விழித்திருந்து காவல் புரிகிறது; வைகறை உன்னுடைய படுக்கைக்கு மெள்ளப் பதுங்கி வந்து உனது கண்களை முத்தமிடுகின்றது.

கனவின் தலைவியான தேவதை அந்தி வானின் வழியே உன்னை நோக்கிப் பறந்து வருகிறாள்.

ஜகன்-மாதா உன்னுடைய தாயின் உள்ளத்தில் என்றும் உனக்கு அருகில் வீற்றிருக்கிறாள்.

நட்சத்திர விண்ணில் குழலூதுபவன், நீ இருக்கும் அறையின் ஜன்னலுக்கு அருகே வந்து தன் குழலுடன் நிற்கிறான்!

*

துயில் – திருடி

ஒரு பாப்பாவின் கண்களிலிருந்து துயிலைத் திருடிச் சென்றது யார்? எனக்குத் தெரிய வேண்டும்.

குடத்தை இடுப்பில் ஏந்திக்கொண்டு அருகேயுள்ள கிராமத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரச் சென்றாள் அன்னை.

உச்சிப் பொழுது; குழந்தைகள் விளையாடி ஓய்ந்துவிட்டன. குளத்திலிருந்த குள்ள வாத்துக்கள் மௌன விரதம் பூண்டிருந்தன.

ஆயச் சிறுவன் ஆலமரத்தின் நிழலிலே படுத்து உறங்கிவிட்டான்.

மாந்தோப்புக் கருகிலுள்ள சதுப்பு நிலத்தில் ஆடாமல் அசையாமல் சிந்தனை தேங்கிய முகத்தோடு நின்றது அந்தக் கொக்கு.

இந்தச் சமயத்தில்தான் துயில்-திருடி வந்தாள்; பாப்பாவின் கண்களி

லிருந்து தூக்கத்தைப் பிடுங்கிக்கொண்டு சிட்டாகப் பறந்து விட்டாள்!

அம்மா வந்து பார்க்கிறாள். பாப்பா தவழ்ந்து தவழ்ந்து அறையை வளைய வந்துகொண்டிருக்கிறான்!

எங்கள் பாப்பாவின் கண்களி லிருந்து தூக்கத்தைத் திருடிச்சென்றவள் யார்? இது எனக்குத் தெரிய வேண்டும். அவளைக் கண்டுபிடித்துக் கட்டிப்போட வேண்டும்!

பிரமாண்டமான பாறைகளுக்கும், பயங்கரக் கற்களுக்குமிடையே சுரந்து வரும் சிற்றோடையை யுடைய இருள் கவிந்த அந்தக் குகையிலே போய்ப் பார்க்க வேண்டும்.

இரவில் தாரகைகளின் அமைதியில் தேவதைகளின் பாதச் சதங்கை ஒலித் துக்கொண்டும், மூலையில் புறாக்கள் 'கூ' வென்ற ஓசையுடன் முனகிக் கொண்டு மிருக்கும் அந்தப் பாகுல மரத் தோப்பின் மயக்கந்தரு நிழலிலே, அவளைத் தேடிப் பார்க்கவேண்டும்.

மின்மினிப் பூச்சிகள் தம் ஒளியை வாரி யிறைக்கும் அந்த மூங்கில் காட்டின் ரகசியம் பேசும் அமைதியிலே, அந்தி வேளையில் நான் எட்டிப் பார்ப்பேன்; நான் சந்திக்கும் ஒவ்வொரு ஜந்துவையும், "துயில்-திருடி எங்கே வசிக்கிறாள்; யாரேனும் எனக்குச் சொல்லக் கூடுமா?" என்று விசாரிப்பேன்.

பாப்பாவின் கண்களிலிருந்து தூக்கத்தைத் திருடிச் சென்றது யார்? எனக்குத் தெரிந்தே யாகவேண்டும்.

அவளை மட்டும் பிடித்துவிட்டால், நல்ல பாடம் கற்பிக்காமல் நான் விட்டு விடுவேனா?

அவள் இல்லத்தைத் தாக்கி, திருடிய தூக்கம் அனைத்தையும் எங்கே புதைத்து வைக்கிறாள் என்பதைக் கண்டுபிடிப்பேன். அனைத்தையும் கொள்ளையடித்து என் வீட்டுக்குக் கொண்டு வந்து விடுவேன்!

அவளால் ஓடிப்போக முடியாதபடி சிறகுகள் இரண்டையும் கட்டி, அவளை நதிக் கரையிலே நிறுத்தி வைப்பேன். அவள் கையிலே ஒரு நாணலைக் கொடுத்

துக் கொறுக்கைப் புற்களுக்கும் குவளைக் கொடிகளுக்கும் நடுவே மீன் பிடிக்கும் விளையாட்டு விளையாடச் செய்வேன்!

சாயங்காலம் சந்தை கலைந்த பிறகு, கிராமக் குழந்தைகள் தங்கள் தாய்களின் மடியிலே வீற்றிருக்கும்போது, இராப்-பட்சிகள் துயில்-திருடியைப் பார்த்து, "நீ இப்பொழுது யாருடைய துயிலைக் களவாடி வருவாய்?" என்று கேட்டு விட்டு, இடி இடி யென்று சிரிக்கும்!

*

உதயம்

௫௪ "அம்மா! நான் எங்கிருந்து வந்தேன்? நீ என்னை எங்கே கண்டுபிடித்தாய்?" என்று குழந்தை தாயைப் பார்த்துக் கேட்டது.

அவள் கரைகாணா ஆர்வத்துடன் குழந்தையை இழுத்து மார்போடணைத்துக்கொண்டு, அழுகையும் சிரிப்புமாகப் பதில் அளித்தனள் :-

"என் செல்வமே! என் இதயத்தில் அதன் ஆசையாகவே நீ மறைந்திருந்தனை!

'என் குழந்தைப் பருவ விளையாட்டுக்களில் என் பொம்மைகளிலே நீ இருந்தாய்! களிமண்ணை வைத்துக்கொண்டு என் இஷ்ட தெய்வத்தை உருவாக்க முயன்றபோது, நான் உன்னையே திருத்தித் திருத்தி அமைத்தேன்.

"எங்கள் குல தெய்வத்துடன் நீயும் கோவில் கொண்டிருந்தனை ; அதைத் தொழுதபோது உன்னையுமன்றே நான் வழிபட்டேன்!

என்னுடைய கோரிக்கைகளிலும் என்னுடைய ஆசைகளிலும் என்னுடைய உயிரிலும்—ஏன், என்னுடைய தாயின் உயிரிலும்கூட நீ இருந்தனை!

"நம் இல்லத்தைக் காக்கும் அழிவிலா சக்தி சொரூபத்தின் மடியிலே, நீ தலைமுறை தலைமுறையாகத் தாலாட்டப் பட்டிருக்கின்றாய்!

"கன்னிப் பருவத்திலே என் இதய மலர் இதழ் விரிந்தபோது அம் மலரின் நறுமணமாக அதனைச் சுற்றித் திகழ்ந் தனை நீ;

"இளமை ததும்பி நின்ற என் அங் கங்களிலே, மலரையொத்த உன் மிருதுத் தன்மை, சூரியோதயத்துக்கு முன் ஆகா யத்திலே தோன்றும் ஜோதியைப்போல ஒளி வீசிற்று!

'சொர்க்கத்தின் முழுமுதற் செல்வ மும், அருணோதயத்தோடு பிறந்த இரட் டைப் பிறவியுமாகிய நீ, உலக உயிர் ஓடை யோடு மிதந்து வந்து என் இதயத்திலே கரை சேர்ந்துவிட்டாய்!

"உன் முகத்தையே உற்றுப் பார்க்கும்போது, நான் எல்லையில்லாத அதிசயத்தில் சிக்கித் தவிக்கிறேன். இந்த ஜகத்துக்கே உரியவனான நீ, என்னுடைய ஏகபோகச் சொத்தாகவன்றோ ஆகிவிட்டாய்! எனவே, எங்கே உன்னை இழந்து விடுவேனோ என்ற அச்சத்தினால் உன்னை மார்போடு இறுக அணைத்துக் கொள்கிறேன், நான்!

உலகின் பொக்கிஷமான உன்னை என் மிருதுவான கைகளில் தந்திரமாகச் சிக்கச் செய்து விட்டது, என்ன மாய வித்தையோ!

✱

குழந்தை உலகம்

என் குழந்தையின் தனி உலகத்துக்கு நடுவில், சாந்தி நிலவும் ஒரு சிறு மூலை கிடைத்தால்கூடப் போதும்; அவ்வளவு ஆர்வம் எனக்கு!

எனக்குத் தெரியும்; அவனுடைய விந்தை உலகில் தாரகைகள்கூட அவனுடன் பேச முன் வரும். அந்த வானம் அவன் முகத்தையே நெருங்கித் தன் வானவிற்களையும் பித்துப் பிடித்த மேகங்களையும் காட்டி அவனை மகிழ்விக்கவும் முன்வரும்!

தாங்கள் ஊமைகள் என்று பாசாங்கு செய்கிறவர்களும், தங்களால் நகரக்கூட முடியாது என்று நடிப்பவர்களும், தங்களுடைய விசித்திரக் கதைகளுடனும் விளையாட்டுச் சாமான்கள் நிறைந்த தட்டுகளுடனும் திருட்டுத்தனமாக அப்படியும் இப்படியும் விழித்துப் பார்த்துக்கொண்டு பதுங்கி வருகின்றனர், அவன் ஜன்னலின் முன்!

எல்லைகள் அனைத்தையும் தாண்டி, குழந்தை மன உலகின் வழியே செல்லும் ரஸ்தாவில் நானும் போகலாமென்றால் எவ்வளவு அருமையாக இருக்கும்!

அந்தச் சாலையிலே, சரித்திரத்திலே வராத மன்னர்களின் ராஜ்யங்களுக்கிடையே, செய்திகொண்டேகும் தூதர்கள் காரணமின்றி விரைகின்றனர்;

அங்கே விவேகம் தன்னுடைய நியாயங்களைக் காற்றாடிகளாக்கிப் பறக்க விடுகின்றது; சத்தியம் உண்மை நிகழ்ச்சிகளின் தளைகளை அறுத்து விடுகின்றது!

காலமும் காரணமும்

குழந்தாய்! உனக்கு வர்ணந் தீட்டிய பொம்மைகள் கொண்டு வரும்போது மேகங்களிலும் நீரிலும் வர்ண விசித்திரங்கள் தோன்றுவது ஏன் என்று எனக்கு விளங்குகின்றது. பூக்களிலே வித விதமான வர்ணங்கள் தீட்டப்பட் டிருப்பதின் காரணம் என்னவென்பதையும் நான் அறிகிறேன்—நவநவமான வர்ணந் தீட்டிய பொம்மைகளை நான் உனக்குத் தரும்போது!

நீ நாட்டியமாட வேண்டும் என்று நான் பாடி வரும்போது இலைகள் ஏன் சலசலத்து இசைக்கின்றன என்பதையும், செவி சாய்த்துக் கேட்கும் பூமிதேவியின் இதயத்தில் கடல் அலைகள் தங்களுடைய கோஷ்டி கானத்தை ஏன் ஒலிக்கின்றன என்பதையும் உண்மையாகவே அறிந்து கொள்கிறேன்—நீ நர்த்தனம் செய்வதற்காக நான் பாட்டுப் பாடும்போது!

உன் பேராசைக் கைகளுக்கு நான் இனிப்புப் பண்டங்களைத் தரும்போது மலர்க்கிண்ணத்தில் மது தேங்கியிருக்கக் காரணமென்ன வென்பதையும், கனிகள்

தங்களுக்குள் இனிய ரசத்தை ஏன் ரகசிய மாக நிரப்பி வைத்துக் கொள்கின்றன என்பதையும் அறிகிறேன்—உன் ஆசைக் கரங்களுக்கு நான் இனித்த பண்டங்கள் வழங்கும்போது!

என் கண்மணியே! உன்னைச் சிரிக்க வைக்க உன் இன்முகத்தை நான் முத்த மிடும்போது உதய ஒளியில் விண்ணி னின்று பொங்கிவரும் ஆனந்த வெள்ளம் எத்தகைய தென்பதையும், கோடையில் இனிய காற்று என் உடலுக்கு அளிக்கும் இன்ப உணர்ச்சி எப்படிப்பட்டதென்ப தையும் நான் நன்கு உணர்கிறேன்—நீ சிரிக்க, நான் உன்னை முத்தமிடும் போதெல்லாம்!

*

குறை கூறலாமா?

ஓ என் குழந்தாய்! ஐயோ! உன் கண்களிலா கண்ணீர்? எதற்கும் அகாரணமாய் உன்னை ஏன் அவர்கள் திட்டிக் கொண்டேயிருக்க வேண்டும்? மிகக் கொடியவர்கள் அவர்கள்; இல்லையா?

நீ எழுத முயன்றபோது உன் விரல்களிலும் முகத்திலும் மையைப் பூசிக் கொண்டு விட்டாயே, அதற்காகவா உன்னை அவர்கள் "அழுக்கு!" என்று சொல்லி முகத்தைச் சுளிக்கிறார்கள்? சீ வெட்கம்! பூரண சந்திரன் தன் முகத்திலே மையைப் பூசிக்கொண்டதற்காக அவனை "அழுக்கு!" என்று அவர்கள் சொல்லத் துணிவார்களா?

என் குழந்தாய்! அற்ப விஷயத்துக்கெல்லாம் அவர்கள் உன்மேல் பழி சுமத்துகிறார்கள். ஒன்றுமில்லாததற்கெல்லாம் உன்னைக் குறை கூற அவர்கள் 'இதோ' என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

விளையாடப் போய் ஆடையைக் கிழித்துக் கொண்டு வந்து விட்டாயே, அதற்காகவா "துஷ்டப் பயலே!" என்று அவர்கள் உன்னைக் கடிந்து கொள்கிறார்கள்! சீ, என்ன வெட்கம்! இலையுதிர்காலத்தில் கிழிந்த மேகங்களுக்கிடையே புன்னகை பூக்கும் காலைக் கதிரவனை அவர்கள் என்னதான் கூறுவார்களோ?

இனிப்புப் பண்டங்களென்றால் உனக்கு ரொம்பப் பிடிக்குமென்பது யாருக்கும் தெரிந்தது தானே?—அதற்கா உன்னைப் "பேராசைப் பித்தன்!" என்று அவர்கள் கேலி செய்வது? ஐயோ, வெட்கம்! உன்மேல் அளவற்ற ஆசை வைத்திருக்கும் எங்களை அவர்கள் என்னதான் சொல்லமாட்டார்கள்?

*

நீதிபதி

அவனைப் பற்றி நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள்; என் குழந்தையினுடைய குற்றங் குறைகள் என்னவென்பதை நானே உண்மையில் அறிவேன்.

அவன் நல்லவன், கெட்டிக்காரன் என்பதற்காக நான் அவனை நேசிக்கவில்லை; அவன் என்னுடைய குழந்தை என்பதற்காகத்தான் நான் அவனை நேசிக்கிறேன்!

அவனுடைய செயல்களில் நல்லதை எடுத்துக்கொண்டு, அதைக் கெட்டதோடு வைத்து நிறுத்துப் பார்த்து நியாயங் கூற முயன்றால், அவன் அருமையை நீங்கள் எப்படி அறியக் கூடும்?

நான் என்ன செய்வேன்?—அவனை நான் தண்டிக்க நினைக்கும்போதுதான், அவன் இன்னும் அதிகமாக என்னுடைய உயிரோடு கலந்து விடுகின்றான்!

அவனுடைய கண்களில் நீர் துளிக்கும்போது, என்னுடைய இதயமுமன்றோ அவனோடு சேர்ந்து கதறுகிறது?

நீங்கள் என்னதான் சொல்லுங்கள், அவனைக் குற்றங் கூறவும் தண்டிக்கவும் உங்களுக்கு உரிமை இல்லை; அந்த உரிமை எனக்குத்தான்! அணைக்குங் கைதான் அடிக்கவும் உரிமையுடையது!

✸

விளையாட்டுக் கருவிகள்

ஓ குழந்தாய்! காலைப் பொழுதெல்லாம் அங்கே புழுதியில் உட்கார்ந்து, ஒரு சிறு குச்சியை வைத்துக்கொண்டு விளையாடும் நீ எவ்வளவு மகிழ்ச்சியுட னிருக்கிறாய்? அந்தச் சிறு குச்சியுடன் நீ திருப்தியோடு விளையாடுவதைக் கண்டு நான் ஆச்சரியங் கலந்த ஆனந்த மடைகிறேன்!

என் கணக்குப் புத்தகங்களை வைத்துக் கொண்டு இலக்கங்களைக் கூட்டிப் போடுவதிலேயே மணிக்கணக்காய் நான் காலத்தைப் போக்குகிறேன். ஒரு வேளை என் மீது ஒரு கணம் உன் பார்வையைச் செலுத்த நேரும்போது, "ஐய, இது என்ன அசட்டு விளையாட்டு?—காலை நேரத்தை யெல்லாம் பாழாக்கிக் கொண்டு!" என்று நீ நினைத்துக்கொள்கிறாயோ, என்னமோ?

குழந்தாய்! குச்சியையும் வெறும் மண்ணால் பிடித்த பிட்டையும் வைத்துக் கொண்டு விளையாடுவதிலே தன் நினைவில்லாமல் லயித்துவிடும் அற்புதக் கலையை நான் மறந்தே போனேனே!

அதற்குப் பதிலாக விலையுயர்ந்த விளையாட்டுப் பொருள்களைத் தேடி நான் வீணே அலைகின்றேன்; சொர்ணக் கட்டிகளையும் வெள்ளிப் பாளங்களையும் சேகரித்துக் குவித்துக் கொண்டேயிருக்கிறேன்!

உனக்குக் கிடைத்ததைக் கொண்டு உன் ஆனந்தமயமான விளையாட்டுக்களை நீயே சிருஷ்டித்துக் கொள்கிறாய்! என் பொழுதும் பலமும் எனக்குக் கிட்டாத பொருள்களைத் தேடுவதில் வீணே அழிகின்றன!

என்னுடைய துர்ப்பலமான தோணியைக் கொண்டு ஆசைக் கடலைக் கடக்க நான் தவித்துத் திணறுகிறேன். என் முயற்சியும் வெறும் விளையாட்டுத்தான் என்பதை மட்டும்.— ஐயோ, நான் மறந்தே விடுகிறேன்!

*

வான சாஸ்திரி

"அதோ, அந்த மரக் கிளைகளிலே அந்தி வேளையில் பூரண சந்திரன் சிக்கிக் கொள்ளும்போது, அதை யாராவது பிடித்துவிடக் கூடாதோ?" என்று நான் சொன்னேன்.

ஆனல் அண்ணவோ என்னைப் பார்த்து இடி இடி யென்று சிரித்துக் கொண்டே, "உன்னைப்போன்ற அசட்டுப் பாப்பாவை நான் பார்த்ததே இல்லை! அம்புலி இங்கிருந்து எத்தனையோ தூரத்திலல்லவா இருக்கிறது? அதை யாரால் பிடிக்க முடியும்?" என்ருன்.

உடனே நான், "அண்ணு" நீ தான் அசடு! அம்மா தன் அறையிலுள்ள ஜன்னலிலிருந்து கீழே விளையாடும் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்போது, அவள் ரொம்ப ரொம்பத் தூரத்திலிருக்கிருள் என்ரு நீ சொல்வாய்?" என்றேன்!

அப்பொழுதும் அண்ணு, "நீ ஒரு மக்கு! நிலவைப் பிடிக்க அவ்வளவு பெரிய வலையை நீ எங்கிருந்து கொண்டு வருவாய்?" என்று என்னைக் கேட்டான்.

"நம்முடைய கைகளாலேயே அதை நிச்சயமாய்ப் பிடித்து விடலாமே?" என்றேன்.

அதைக் கேட்டு அண்ணு சிரித்து விட்டு, "உன்னைப்போன்ற பைத்தியத்தை நான் பார்த்ததேயில்லை! அம்புலி உன் அருகே வருமானல் அது எவ்வளவு பெரிது என்பதை நீயே அறிவாய்!" என்ருன்.

"அண்ணு! பள்ளியில் பொருளற்ற விஷயங்களையெல்லாம் உனக்குக் கற்றுத் தருகிருர்கள்! அம்மா நம்மை முத்தமிடக் குனியும்போது, அவள் முகம் ரொம்பப் பெரிதாகவா ஆகிவிடுகிறது?" என்று பனிச்சென்று கேட்டேன் நான்!

அப்படியும் பார், அம்மா! அந்த அண்ணு என்னை, "நீ ஒரு அசட்டுப் பாப்பா!" என்றே சொல்லுகிருன்;

★

மேகங்களும் அலைகளும்

அம்மா! மேலே மேகங்களில் வசிக்கிறார்களே, அவர்கள் அங்கிருந்து என்னைப் பார்த்துச் சொன்னார்கள்—"காலையில் கண்விழித்து எழுந்ததிலிருந்து பொழுது சாயும் வரையில் நாங்கள் விளையாடிக் கொண்டேயிருக்கிறோம். பொன்னிறமான அருணோதயத்துடன் விளையாடுகிறோம், வெள்ளி நிலவுடனும் நாங்கள் விளையாடுகிறோம்!" என்று ஆசை காட்டி என்னை அழைத்தார்கள்.

"ஆனால், நான் எப்படி அங்கே வருவேன்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், வானமும் பூமியும் கூடும் இடத்துக்கு வந்து, கைகளைத் தூக்கிக் காட்டுவாயானால் நாங்கள் உன்னை மேலே மேகங்களில் தூக்கிக் கொண்டு போய் விடுவோம்!" என்றார்கள்.

"அம்மா எனக்காக வீட்டிலே காத்துக் கொண்டிருக்கிறாள். அவளை விட்டு விட்டு நான் எப்படி வருவது?" என்று கேட்டேன். அம்மா! மேகவாசிகள்

அதைக் கேட்டுச் சிரித்துவிட்டு மிதந்து சென்று விட்டார்கள். அந்த விளையாட்டைக் காட்டிலும் வேடிக்கையான விளையாட்டு ஒன்று எனக்குத் தெரியும், அம்மா!

நான்தான் மேகம்; நீயே சந்திரன். நான் என் இரண்டு கைகளாலும் உன் முகத்தை மறைத்து விடுவேன். நம் வீட்டுக் கூரையே நீலவானம்!

அலைகளிலே வாழ்கிறார்கள், பார்! அவர்கள் அங்கிருந்து என்னைப் பார்த்து "நாங்கள் காலையிலிருந்து இரவு வரை பாடிக்கொண்டே யிருக்கிறோம்; எங்கு செல்லுகிறோம் என்பதே தெரியாமல் முடிவின்றிப் பிரயாணஞ் செய்து கொண்டே யிருக்கிறோம்!" என்று இரைந்து அழைத்தார்கள்.

"ஆனால் நான் உங்களோடு எப்படிச் சேர்வது?" என்று கேட்டேன். அவர்கள், "கரையோரமாக வந்து நின்றுகொள். நின்று, கண்களிரண்டையும் கெட்டியாக மூடிக்கொண்டு விடுவாயானால் நீ அலைகளின் மேல் ஏந்திச் செல்லப்படுவாய்!" என்று வழி சொன்னார்கள்.

"சாயங்காலமாகிவிட்டால், என்னைத் தன்னுடன் வீட்டிலிருக்கவேண்டும் என்று அம்மா எப்பொழுதுமே விரும்புகிறாள். அம்மாவைத் தனியே விட்டு நான் எப்படி வருவது!" என்றேன். அதைக் கேட்டு அந்த அலை-ஜனங்கள் சிரித்துவிட்டு, நடனமாடிக்கொண்டே மறைந்துவிட்டார்கள். அந்த விளையாட்டைக் காட்டிலும் சிறந்த விளையாட்டு ஒன்று எனக்குத் தெரியுமே, அம்மா!

நான்தான் அலைகள்; நீதான் பெயரில்லாத ஒரு நூதனக் கடற்கரை என்று வைத்துக்கொள்ளுவோம். நான் உருண்டுருண்டு வந்து சிரித்துக்கொண்டே உன் மடியில் மோதி விழுவேன். நீயும் நானும் எங்கே இருக்கிறோம் என்றே யாருக்கும் தெரியாது!

★

செண்பகப் பூ

ஒரு விளையாட்டுக்காகவாவது நான் ஒரு செண்பக மலராகி, அதோ அந்த மரத்தின் உச்சாணிக் கிளையிலே காற்றில் இப்படியும் அப்படியும் அசைந்து, சிரித்துக்கொண்டே இளந்தளிர் இலைகளின் மேல் நடனமாடினால் நீ என்னைக் கண்டு கொள்ளுவாயா, அம்மா ?

"பாப்பா ! நீ எங்கேயடா போனாய் ?" என்று நீ கூவியழைப்பாய் ! நான் எனக்குள் சிரித்துக்கொண்டு, 'கப்சிப்' யென்றிருப்பேன் !

நான் மெல்ல இதழ் விரித்து, நீ வேலை செய்யும்போது உன்னை எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பேன். நீராடி விட்டு நனைந்த கூந்தலைத் தோளிலே விரித்து விட்டுக் கொண்டு, செண்பக மரத்து நிழலோரமாகப் பூஜை செய்வதற்காக நீ முற்றத்துக்குச் செல்

லும்போது, செண்பக மலர் மணம் வீசுவதை உணர்வாய். ஆனல், அந்த மனதைக் கவரும் நறுமணம் என்னிட மிருந்துதான் வீசுகிற தென்பதை நீ அறிய மாட்டாய், அம்மா!

பகல் உணவு முடிந்தபின், நீ உன் ராமாயணப் புத்தகத்தை வைத்துக் கொண்டு ஜன்னலில் உட்கார்ந்து படிக்கும்போது, செண்பக மரத்தின் நிழல் உன் கூந்தலிலும் மடியிலும் விழும். அப்போது நான் என் சின்னஞ்சிறு நிழலை நீ படிக்கும் பக்கத்தில், வாசிக்கும் எழுத்தின் மேல் வீசி விழச் செய்வேன். ஆனல் அந்தச் சிறுநிழல் உன் குழந்தையி னுடையது என்று நீ சந்தேகிப்பாயா, அம்மா?

அந்தி மாலையில் விளக்கேற்றி எடுத்துக்கொண்டு நீ மாட்டுக் கொட் டிலுக்குச் செல்லும்போது, நான் என் 'பூ' விளையாட்டை விட்டு, பூமியில் உதிர்ந்து மீண்டும் உன் குழந்தையாகவே மாறி, "எனக்கு ஒரு கதை சொல்லம்மா!" என்று கெஞ்சுவேன்.

"போக்கிரிப் பயலே! எங்கேயடா போயிருந்தாய்?" என்பாய் நீ.

"அந்த ரகசியத்தை உனக்குச் சொல்ல மாட்டேன், அம்மா!" என்பேன் நான்.

★

கனவுலகம்

ஊஹும்.......என் அரச மாளிகை எங்கே இருக்கிறதென்று யாருக்காவது தெரிந்துபோய் விட்டால், அது மாயமாக மறைந்தே விடும்!

அதனுடைய சுவர்கள் வெள்ளியினால் ஆனவை; அதனுடைய விதானம் பொன்னால் அமைக்கப்பட்டது!

ஏழு பிரகாரங்களையுடைய மாளிகையொன்றில் இராணி வசிக்கிறாள். அவள் அணிந்திருக்கும் அந்த ஓர் ஆபரணம் மட்டுமே ஏழு ராஜ்யங்களின் ஐசுவரிய மனைத்தையும் கொடுத்து வாங்கியது!

ஆயினும், அம்மா! அந்த என் மன்னனின் மாளிகை எங்கிருக்கிறதென்பதை உனக்கு மட்டும் ரகசியமாகச் சொல்லுகிறேன். கேள்!

அதோ, திறந்த மாடியில் அந்த மூலையிலே துளசிச் செடி இருக்கிறது பார்? அங்கேதானிருக்கிறது, என் அரசன் அரண்மனை!

யாரும் கடந்தறியாத சப்தக் கடல்களின் கடைசிக் கரையிலே, அரசிளங் குமரி படுத்துத் துயில்கின்றனள்.

அவளைக் கண்டுபிடிக்க என்னைத் தவிர இந்த உலகத்தில் வேறு யாராலும் முடியவே முடியாது! அவள் கைகளிலே கங்கணங்கள்; அவள் காதுகளிலே நல்ல ஒளி முத்துக் குண்டலங்கள்! அவளது நீண்ட கூந்தல் தரையிலே சாய்ந்து விழுந்து புரளுகிறது!

என்னுடைய மந்திரக்கோலால் அவளைத் தொட்டதுமே விழித்தெழுவாள் அவள்! அவள் புன்முறுவல் பூக்கும் போதெல்லாம், ரத்தினங்கள் அவள் இதழ்களினின்றும் உதிர்ந்தே தீரும்!

ஆனால், அம்மா! உனக்கு மட்டும் காதோடு காதாய் அந்த ரகசியத்தைச் சொல்லுகிறேன், கேள்!

அதோ, திறந்த மாடியில் அந்த மூலையில் துளசிச் செடி இருக்கிறது பார்? அங்கேதான் இருக்கிறாள், அந்த அரசிளங் குமரி!

குளிப்பதற்காக நதிக்குச் செல்லும் நேரம் வந்துவிட்டால், நீ சற்றே திறந்த மாடிக்கு வந்துவிட்டுப் போ!

சுவர்களின் நிழல்கள் பின்னும் அந்த மூலையில் நான் உட்கார்ந்திருப்பேன். நமது பூனைக்குட்டி மட்டும்தான் என்னுடன் அங்கு வர அனுமதிக்கப்படும். ஏனெனில், கதையில் வரும் நாவிதன் வாழும் இடம் அதற்குத்தான் தெரியும்!

அம்மா! அந்த நாவிதன் எங்கேயிருக்கிறான் என்பதை உனக்கு மட்டும் சொல்லுகிறேன்—கிட்ட வா, அம்மா!

அந்த நாவிதன் வசிப்பது, திறந்த மாடியில் துளசிச் செடி இருக்கிறதே, அந்த மூலைதான்!

★

சிறையே!

ஐயோ அம்மா! வானத்தின் ஒளி மங்கி சாம்பல் பூத்துவிட்டது; மணியே தெரியவில்லையே!

விளையாடவும் பிடிக்கவில்லை; அதனால் உன்னையே தேடி வந்துவிட்டேன். இன்று சனிக்கிழமை, எங்கள் விடுமுறை நாள்.

அம்மா! வேலை செய்தது போதும்; இங்கே வந்து ஜன்னலருகில் என்னோடு உட்கார்ந்து கொண்டு, தேவதைக் கதையிலே வருகிற தெபாந்தர் பாலைவனம் எங்கே யிருக்கிறதென்று சொல்லம்மா?

மழையின் மங்கல், வானத்திலே ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை பரவி, இன்று பகல் முழுவதையுமே மூடிக் கொண்டிருக்கிறது.

கோப மின்னல் தன்னுடைய கூரிய நகங்களினால் ஆகாசத்தைக் கீறிக் கிழிக்கின்றது.

மேகங்கள் உறுமிக்கொண்டு ஒன்றோடொன்று உராய்ந்து இடிக்கும்போது, நெஞ்சிலே பயம் கலந்த நடுக்கத்துடன் உன்னை இறுகக் கட்டிக் கொள்வதுதான் என்ன ஆனந்தம், அம்மா!

கனத்த மழை மணிக்கணக்கில் மூங்கில் இலைகளின் மேல் சரசர வென்று கொட்டும்போது, வீசும் புயலில் அதிர்ந்து சாளரக் கதவுகள் கீச்சிடும்போது, உன்னுடன் நான் மட்டும் இந்த அறையில் தனியே உட்கார்ந்துகொண்டு மோகினிக் கதையிலே வரும் தெபாந்தர் பாலை நிலத்தைப் பற்றி நீ சொல்லும் கதையைக் கேட்டுக் கொண்டிருப்பதுதான் எவ்வளவு ஆனந்தம்!

அது எங்கே இருக்கிறது, அம்மா? எந்தக்கடலின் கரையிலே? எந்தக் குன்றுகளின் அடிவாரத்திலே? எந்த அரசனுடைய ராஜ்யத்திலே? அம்மா! அம்மா! சொல்லம்மா?

அங்கே நிலங்களைப் பிரிக்க வேலிகளில்லை. காட்டிலிருக்கும் சுள்ளிகளைப் பொருக்கிவரும் பெண்கள் தங்கள் சுமை

களைச் சந்தைக்கு எடுத்துவரவோ, ஊரார் சாயந்திர மானதும் கிராமத்துக்குத் திரும்பி வரவோ அங்கு செப்பனிட்ட பாதையில்லை. ஞானிகளாகிய கிழப் பறவைகளிரண்டும் வசிக்கும் கூண்டை யுடைய ஒரே ஒரு மரமும், காய்ந்த புல் திட்டுகளுந்தான் அந்த மணல் வெளியில் இருக்கின்றன; அதுவே தெபாந்தர் பாலை நிலம்.

இன்று போலவே மப்பும் மந்தாரமுமா யிருந்த ஒரு நாளில், யாருமே கடந்து சென் றிராத ஒரு கடலுக்கப்பால், ராட்சத னுடைய அரண்மனையில் சிறை வைக்கப் பட்டிருந்த அரசிளங் கன்னியைத் தேடிக் கொண்டு, ராஜாவின் இளங் குமாரன் சாம்பல் நிறக் குதிரையின் மேலேறி பாலை வனத்தின் வழியே தன்னந்தனியாகச் சென்று கொண்டிருந்த காட்சியை என் னால் கற்பனை செய்து கொள்ளமுடிகிறது.

மழைத் தாரை அடிவானத்தைத் திரையிட்டு மறைக்கும்போது, திடீரெனத் தோன்றி மறையும் நோயின் வலியைப் போல மின்னல் வெட்டி மறையும் போது,

தேவதைக் கதையிலே வரும் தெபாந்தர் பாலையினூடே செல்லும் அவன், ராஜாவினால் புறக்கணிக்கப் பட்டுக் கண்களில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டே மாட்டுக் கொட்டிலைப் பெருக்கித் தள்ளிக் கொண்டிருக்கும் தன் ஏழைத் தாயை நினைத்தானே?

பார், அம்மா! பகல் பொழுது சாய்வதற்குள்ளேயே இருள் மண்டிவிட்டது. அதோ, அந்தக் கிராம வீதியில் ஒரு வழிப்போக்கனைக்கூடக் காணவில்லையே!

இடைப் பையன் மேய்ச்சலிருந்து வெகு விரைவிலே மாடுகளை ஓட்டிக் கொண்டுவந்துவிட்டான். குடியானவர்கள் தங்கள் வயல்களிலிருந்து திரும்பி விட்டுத் தாழ்வாரங்களிலே பாயை விரித்து உட்கார்ந்துகொண்டு, பயங்கரத் தோற்றமளிக்கும் மேகக் கூட்டங்களைப் பார்த்து விழிக்கிறார்கள்.

புத்தகங்களை யெல்லாம் எடுத்து அலமாரியில் வைத்துவிட்டேன்- "போய்ப் படி!" என்று என்னை விரட்டாதே, அம்மா!

நானும் வளர்ந்து அப்பாவைப்போல் பெரியவனானதும், என்னென்ன படிக்க வேண்டுமோ அதையெல்லாம் படித்துத் தெரிந்துகொண்டு விடுவேன். பயப் படாதே, அம்மா!

ஆனால் இன்றைக்குமட்டும் தேவதைக் கதையிலே வருகிறதே, அந்த தெபாந்தர் பாலைவனம் எங்கிருக்கிறதென்று சொல் வாயா, அம்மா?

*

மழையோ, மழை!

❀❀ பயங்கர மேகங்கள், காட்டின் கரிய விளிம்பிலே வெகு வேகமாகத் திரள்கின்றன.

ஆ குழந்தாய்! நீ வெளியே செல்லாதே!

ஏரிக்கரையிலே வரிசையாக நிற்கும் தென்னை மரங்கள், தலைவிரித்தாடி இருண்ட வானை மோதி அறைகின்றன; மழையில் நனைந்து அலங்கோலமாகியிருக்கும் சிறகுகளுடன், காகங்கள் புளியமரக் கிளைகளிலே மௌனமாக வீற்றிருக்கின்றன. நதியின் கீழக் கரையிலே இருள் இருண்டு வருகின்றது.

வேலியிலே கட்டியிருக்கும் நம் பசு, "அம்மா....!" என்று அலறுகிறது.

ஆ, குழந்தாய்! நான் பசுவைக் கொட்டிலிலே கட்டிவிட்டு வரும் வரை நீ இங்கேயே இரு!

குளங் குட்டைகளிலிருந்து வழிந்தோடும் ஜலத்தில் தப்பிவரும் மீனினங்களைப் பிடித்து வர, நீர் தேங்கி நிற்கும் வயலிலே ஆண்பிள்ளைகள் கூடியிருக்கின்றனர்.

அம்மானை அலைக்கழிக்க வேண்டிச் சிரித்துக் கொண்டே ஓட்டம் பிடிக்கும் சிறு பிள்ளை போலவே, குறுகிய சந்துகளின் வழியே மழைத் தண்ணீர் சிற்றோடைகளாக வெள்ளமெடுத்தோடுகின்றது.

கவனி! துறையில் யாரோ பரிசல்காரனைக் கூவியழைக்கிறார்கள்.

ஆ, குழந்தாய்! பகலொளி மங்கிவிட்டது; ஓடத்துறையிலே இக்கரையிலிருந்து எதிர்க் கரைக்குப் படகு தள்ளுவது நின்றுவிட்டது.

வெறி பிடித்தோடும் மழையின்மேல் ஆகாயமே சவாரி செய்வது போலன்றோ தோன்றுகிறது? நதியிலே வெள்ளம் கொந்தளித்துப் பொறுமை யிழந்து கதறிச் செல்லுகிறது; குடங்களிலே நீர் மொண்டு செல்லும் பெண்கள் கங்கைக் கரையிலிருந்து அவசரமாகவே வீடு திரும்பிவிட்டனர்.

அந்தி விளக்குகளைத் தயாராக ஏற்றி வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆ, சூழ்ந்தாய்! நீ வெளியே போகாதே!

கடை வீதிக்குச் செல்லும் சாலையில் ஆள் அரவமே இல்லை; ஆற்றுக்குச் செல்லும் சிறு சந்தோ ஒரே சறுக்கலாயிருக்கிறது. வலையில் சிக்கிக் கொண்டே கொடிய காட்டு மிருகம் போல, மூங்கிற் காட்டிலே சிக்கித் தத்தளித்து ஊளையிடுகிறது, காற்று!

★

காகிதப் படகுகள்

[illegible] துள்ளி வரும் நீரோடையிலே நாள்தோறும் என் காகிதப் படகுகளை ஒன்றன் பின் ஒன்றாக மிதக்க விடுகிறேன். பெரிய கரிய எழுத்துக்களில் என் பெயரையும் என்னுடைய கிராமத்தின் பெயரையும் அவற்றில் எழுதி வைக்கிறேன்.

வேறொரு தேசத்தில் யாராவது இந்தக் கப்பல்களைக் காண்பார்களென்றும், இவற்றை அனுப்பிய என்னை அறிவார்களென்றும் நம்புகிறேன்.

என்னுடைய சிறு படகுகளை, எங்கள் தோட்டத்திலே வளரும் ஷியூலி மலர்களைக் கொண்டு நிரப்புகிறேன். உதய ஒளியில் பிறந்த இம் மலர்கள், பொழுது சாய்ந்ததும் எங்காவது கரை சேர்ககப்படும் என்பதே என் நம்பிக்கை.

என்னுடைய காகிதப் படகுகளைத் தண்ணீரிலே மிதக்க விட்டுவிட்டு ஆகாயத்தைப் பார்க்கும்போது அங்கே சின்னச் சின்ன மேகங்கள் படகுகள் போலத்

தங்கள் வெள்ளைப் பாய்களை விரித்துப் புறப்படுவதைக் காண்கிறேன்.

ஆகாயத்திலே இருந்து கொண்டு, கீழே செல்லும் என் படகுகளுடன் போட்டியிட காற்றிலே அந்த மேகப் படகுகளை மிதக்கவிடும் என் விளையாட்டுத் தோழன் யாரோ, அறியேன்!

இரவு வந்ததும் முகத்தைக் கைகளிலே புதைத்துக் கொண்டு நள்ளிரவில் தாரகைகளின் கீழே என் காகிதப் படகுகள் மேலே மேலே மிதந்து செல்வதாகவே நான் கனவு காண்கிறேன்.

தூக்க-தேவதைகள் அவற்றில் செல்கின்றனர். ஏற்றப்பட்டிருக்கும் சரக்கு, இனிய கனவுகள் நிறைந்த கூடைகள்!

★

மாலுமி

ஒரு படகோட்டி மதூவின் படகு ராஜ்கஞ்ஜ் துறையிலே நங்கூரம் பாய்ச்சி நிற்கிறது.

பிரயோஜனமே யில்லாமல் சணலைக் கொண்டுபோய் அதில் ஏற்றி, எத்தனையோ காலமாகக் கிளம்பாமல் அங்கேயே கிடக்கிறது, அது!

எனக்கு மட்டும் அவன் அதைக் கொஞ்சம் இரவல் கொடுத்தால், அதிலே நூறு துடுப்புகள் தள்ளச் செய்வேன்; ஐந்து, ஆறு அல்லது ஏழு பாய்கள் உயர்த்தச் செய்வேன்!

ஐய! சந்தைகளுக்கெல்லாம் படகை ஓட்டிச் செல்லமாட்டேன், நான்!

தேவதை உலகத்தில் உள்ள ஏழு கடல்களையும் பதின்மூன்று நதிகளையுமே நான் கடப்பேன்!

ஆனால், அம்மா! மூலையில் போய் உட்கார்ந்துகொண்டு எனக்காக நீ அழ வேண்டாம்!

ராமனைப் போல் பதினான்கு வருடங்களுக்குப் பிறகே திரும்பி வர, நான் என்ன காட்டுக்கா போகிறேன்? —இல்லையே!

கதையிலே வரும் இளவரசனைப் போலவே நானும் எனக்குப் பிடித்ததை யெல்லாம் கொண்டு என் படகை நிறைத் துக் கொள்வேன்.

என் சிநேகிதன் அஷுவை என் னுடன் அழைத்துச்செல்வேன். நாங்கள் ஆனந்தமாகத் தேவதை உலகின் ஏழு கடல்களையும் பதின்மூன்று நதிகளையும் கடந்தே செல்வோம்!

விடி வெள்ளியிலேயே எங்கள் கப்பலில் பாய் விரித்துப் புறப்படுவோம்.

நடுப்பகலில் நீ குளத்தில் குளிக்கும் வேளையிலே, முன் பின் அறியாத ராஜா ஒருவரின் தேசத்துக்கே நாங்கள் சென்றிருப்போம்.

திரிபூர்ணித் துறையையும் தாண்டி, அதற்கப்பால் தெபாந்தர் பாலை நிலத்தை யும் கடந்து, நாங்கள் வெகுதூரம் செல்வோம்.

வீடு திரும்புகையில் இருட்டிவிடும். எங்களுடைய பிரயாணத்தில் நாங்கள் கண்ட அதிசயங்களை யெல்லாம் ஒன்று விடாமல் உனக்கு நான் சொல்வேன்.

தேவதை உலகில் உள்ள ஏழு கடல்களையும் பதின்மூன்று நதிகளையும் நான் கடந்து செல்வேன்!

*

அக்கரை !

நதியின் அக்கரைக்குச் செல்ல எனக்கு எவ்வளவோ ஆசை !

எங்கே மூங்கில் கம்புகளுடன் பிணைக்கப் பட்டுப் படகுகள் வரிசையாக நிற்கின்றனவோ அந்தக் கரைக்கு !

எங்கே விடியற்காலையில் குடியானவர் தங்கள் தோள்களின்மேல் கலப்பைகளைச் சுமந்து கொண்டு, வெகு தூரத்துக் கப்பாலிருக்கும் தங்கள் வயல்களை உழுவதற்காகப் படகுகளிலேறி ஆற்றைக் கடந்து சென்று இறங்குகிறார்களோ, அந்த எதிர்க்கரைக்கு !

எங்கே இடையர்கள் பயத்தினால் கதறும் தங்கள் ஆடுமாடுகளை, ஆற்றங் கரைப் புல்வெளிகளில் மேய்ப்பதற்காக அவற்றை நீந்தி ஆற்றைக் கடக்கச் செய்கிறார்களோ, அந்தக் கரைக்கு !

எங்கிருந்து அவர்களெல்லோரும் சாயந்திரமானதும் புதர் மண்டிக் கிடக்கும்

தீவிலே நரிகளை ஊளையிட விட்டு விட்டு வீடு திரும்புகிருர்களோ, அந்த எதிர்க் கரைக்கு!

உனக்கு ஆட்சேபணை யில்லையென்ருல், அம்மா, பெரியவனானதும் நான் ஆற்றங்கரையில் ஓர் ஓடக்காரனுகிவிடவே விரும்புகிறேன்!

செங்குத்தாக நிற்கும் அந்த எதிர்க் கரைக்குப் பின்னுல், யாரும் கண்டறியாத பல அதிசயமான குளங் குட்டைகள் மறைந்திருக்கின்றனவாம்!

அங்கே, மாரிக்கால முடிவில் காட்டு வாத்துக்கள் கூட்டங் கூட்டமாக வருகின்றனவாம்; அந்தக் குளங்களைச் சுற்றிலும் ஓரங்களில் அடர்த்தியாக வளர்ந்துள்ள நாணல்களுக் கிடையே நீர்ப் பறவைகள் முட்டைகளிடுகின்றனவாம்!

அங்கே, தங்களுடைய வால்களை வெகு அழகாக அசைக்கும் உள்ளான் குருவிகள், சுத்தமாக இருக்கும் மிருதுவான சேற்றிலே தங்கள் சிறு அடிச்சுவடுகளைப் பதித்துச் செல்கின்றனவாம்!

அங்கே, அந்தி மாலையில் வெண் மலர் முடி தரித்த நீண்ட புற்கள் தங்களுடைய சிலிர்க்கும் அலைகளில் மிதந்து செல்ல அம்புலியை அழைக்கின்றனவாம்!

அம்மா! உனக்கு ஆட்சேபணையில்லையென்றால், நான் பெரியவனானதும் இக்கரையிலிருந்து அக்கரைக்குப் படகு தள்ளும் ஓடக்காரனாகி விடுவேன், அம்மா!

இக்கரையிலிருந்து அக்கரைக்கும், அக்கரையிலிருந்து இக்கரைக்குமாக நான் படகு தள்ளிக்கொண்டேயிருப்பேன்! அப்போது, துறையிலே நீராடிக்கொண்டிருக்கும் கிராமச் சிறுவர்களும் சிறுமிகளும் என்னைக் கண்டு அதிசயப் படுவார்கள்!

காலை தேய்ந்து நடுப்பகலாகிக் கதிரவன் உச்சி தொட்டதும், நான் ஓடோடியும் உன்னிடம் வந்து, "அம்மா! எனக்குப் பசிக்கிறது!" என்பேன்.

பகல் பொழுது தீர்ந்து இருட்டி, நிழல்கள் மரத்தடிகளில் பதுங்கி வரும் போது, அந்தியின் மங்கின ஒளியில் நான் வீடு திரும்புவேன்.

வேலையே குறியாக, தந்தையைப் போல் உன்னை இங்கே தனியே விட்டு விட்டு, நான் பட்டணத்துக்குப் போய் விட மாட்டேன், அம்மா!

அம்மா, உனக்கு ஆட்சேபனை யில்லையென்றால், பெரியவனானதும் ஆற்றங்கரையில் படகோட்டியாகி விட விரும்புகிறேன், நான்!

*

மலர்ப் பள்ளி

கனத்த மழை — மேகங்கள் வானத்திலே முழங்கும்போது, கோடை மழை சுமந்து வரும் கீழ்க்காற்று புதர் நிலத்தின்மேல் பதறி வந்து, மூங்கில் காட்டிலே ஊதி முழக்குகின்றது!

அச்சமயம் மலர்கள் கூட்டங் கூட்டமாக — அவை எங்கிருந்துதான் வந்தனவோ!-புல்லின்மேல் களிவெறியோடு நடம் புரிகின்றன!

அம்மா, எனக்கு நிச்சயமாகத் தெரியும்; இந்தப் பூக்களுக்குப் பூமிக்கடியில் எங்கேயோ ஒரு பள்ளிக்கூடம் இருக்கத்தான் இருக்கிறது!

அந்த மலர்கள் கதவை அடைத்துக் கொண்டு தங்கள் பாடங்களைப் படிக்

கின்றன. மணியடிப்பதற்கு முன்பே அவை விளையாட ஆசைப்பட்டால், உபாத்தியாயர் அவற்றை மூலையிலே நிற்கவைப்பார்!

மாரிக்காலம் வரும்போது அவற்றுக்கு விடுமுறை!

காட்டிலே கிளையோடு கிளை உராய்கிறது; பேய்க்காற்றில் இலைகள் சலசலக்கின்றன; இடி மேகங்கள் தங்களுடைய ராட்சசக்கைகளைக் கொட்டி முழக்குகின்றன. ரோஜாவர்ணம், அழகிய மஞ்சள், தூய வெள்ளை — இவற்றில் ஆடைகள் தரித்துக்கொண்டு மலர்க் குழந்தைகள் விரைந்து வெளிவருகின்றன.

அம்மா, உனக்குத் தெரியுமா? அவற்றின் வீடு மேலே மின்னும் தாரகைகளின் வீடுதான்.

அங்கு செல்ல மலர்கள் எப்படித் துடிக்கின்றன, பார்த்தாயா? அவை அப்படி அவசரப்படுவது ஏன் என்று உனக்குத் தெரியாதா?—எனக்குத் தெரியும்,

யாரைப் பார்த்து அவை தங்கள் கைகளைத் தூக்கி வணங்குகின்றன என்று! இங்கே எனக்கு உன்னைப் போன்ற தாயார் இருப்பதுபோல, அங்கே அவற்றின் அன்னையும் இருப்பாளல்லவா?

*

வியாபாரி

ஓ அம்மா! நான் புதிய தேசங்களுக்குப் பிரயாணம் செய்வதாயும் உன்னை வீட்டிலேயே விட்டுவிட்டுச் செல்வதாயும் வைத்துக்கொள்.

என் படகு நிறையச் சாமான்கள் ஏற்றப்பட்டுத் துறைமுகத்திலே தயாராக நிற்கிறதாம்.

அம்மா! நன்றாக யோசித்துப் பார்த்துச் சொல். நான் திரும்பி வரும்போது உனக்கு என்ன கொண்டு வரவேண்டும்?

உனக்குக் குவியல் குவியலாகத் தங்கம் வேண்டுமா, அம்மா! நான் போகுமிடங்களிலே, பொன்மயமான ஓடக் கரைகளிலே, வயல்களில் பொன்னிறக் கதிர்கள் ஏராளம். காட்டுப் பாதையின் நிழலிலே, பொன்னிறச் **செண்பக** மலர்கள் கொட்டிக் கிடக்கின்றன.

அவற்றை யெல்லாம் நூற்றுக்கணக்கான கூடைகளிலே நான் உனக்காக அள்ளிச் சுமந்து வருவேன்!

அம்மா! இலையுதிர் காலத்து ஆலங்கட்டி மழைத் துளிகளைப் போல, மிகப் பெரிய முத்துக்கள் உனக்கு வேண்டுமா?

அதற்காக நான் கடலைத் தாண்டி முத்துத் தீவுக்கே செல்வேன்.

அங்கே உதய சூரியன் இளங்கதிரொளியில், பசும் புற்றரையில் பூத்த மலர்களிலே, முத்துக்கள் ஒளி வீசித் துடித்து நிற்கின்றன. அவை புற்களின் மேல் உதிர்ந்தும் கிடக்கின்றன. மிகக் கொடிய கடலலைகள் வீசி எறியும் துமிகளிலே முத்துக்கள் மணலில் வாரி இறைக்கப்படுகின்றன!

மேகங்களிடையே பறந்து செல்லக் கூடிய ஒரு ஜதைக் குதிரைகளை அண்ணுவுக்குக் கொண்டு வருவேன்.

அப்பாவுக்கு மந்திரப் பேனு ஒன்று கொண்டு வருவேன்—அது அவர் அறியாமலே எதையும் எழுதி முடிக்கும் ஆற்றல் பெற்றதாயிருக்கும்!

அம்மா! ஏழு மன்னர்கள் தங்கள் ராஜ்யங்களையே இழப்பதற்குக் காரணமாயிருந்த அந்த அபூர்வ ரத்தினத்தையும், அதன் பேழையையுங்கூட நான் உனக்கு கொண்டுவருவேன்!

*

அனுதாபம்

என் கண்ணான தாயே! நான் உன் குழந்தையாக இல்லாமல் ஒரு நாய்க்குட்டியாக இருந்து, உன்னுடைய தட்டில் வாய் வைத்துத் தின்ன முயன்றால், 'கூடாது!' என்று தடுப்பாயா, என்னை?

"சீ, போ! போக்கிரி நாய்க்குட்டி!' என்றுசொல்லி என்னை விரட்டிவிடுவாயா?

அப்படியானால் போ, அம்மா, போ! நீ என்னைக் கூப்பிடும்போது நான் உன்னிடம் வரமாட்டேன்; நீ எனக்குச் சோறு ஊட்ட நான் சம்மதிக்கவும் மாட்டேன்!

என் அருமைத் தாயே! நான் உன் குழந்தையாக இல்லாமல் பச்சைக் கிளியாக இருந்தால், பறந்து போய்விடுவேன் என்று என்னைக் கூண்டில் அடைத்து விடுவாயா?

என்னைப் பார்த்து வெறுப்புடன், "என்ன நன்றி கெட்ட பறவை! இரவும்

பகலும் கூண்டுக் குச்சிகளைக் கொத்திக் கடித்தபடியே இருக்கிறது!" என்று கடிந்துகொள்வாயா?

அப்படியானால் போ, அம்மா போ! நான் காட்டுக்கே போய்விடுகிறேன்; இனி நீ என்னைத் தூக்கி எடுத்துக்கொள்ள நான் சம்மதிக்கவேமாட்டேன்!

தொழிலே !

காலையில் சேகண்டி மணி பத்தடிக்கும்போது நம் தெருவழியே நான் பள்ளிக்குச் செல்லும்போது, "வளையல், கண்ணாடி வளையல்!" என்று கூவி அழைக்கும் வளையல் வியாபாரியைக் காண்பேன்.

நடையைத் துரிதப்படுத்தவேண்டிய அவசியம் அவனுக்கில்லை; குறிப்பிட்ட ஒரு வழியே நடக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை! இத்தனை மணிக்கு வீடு திரும்பிவிட வேண்டும் என்ற கட்டாயமுமில்லை!

நாளெல்லாம் வீதியில் அலைந்து கொண்டு, "வளையல், பட்டு வளையல்!" என்று கூவித்திரிய நானும் ஒரு வளையல் வியாபாரியாகிவிட்டால் எவ்வளவு இன்பமாயிருக்கும்!

மாலை நாலு மணிக்குப் பள்ளியிலிருந்து திரும்பும்போது, அதோ அந்த வீட்டின் வாசல் வழியே தோட்டக்காரன் நிலத்தைக் கொத்திவிட்டுக் கொண்டிருப்பதைப் பார்ப்பேன்.

அவன் தன் மண்வெட்டியை வைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; தன் ஆடையில் எவ்வளவு வேண்டுமானாலும் அழுக்கேற்றிக்கொள்ளலாம்; வெயிலில் காய்ந்தாலும் சரி, மழையில் நனைந்தாலும் சரி, அவனை 'ஏன்?' என்று கேட்பாரில்லை!

ஆஹா! என்னை யாரும் தடுக்காமல் என் இஷ்டம்போல் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தோட்டத்தைக் கொத்திவிட்டுக்கொண்டிருக்க, நான் ஒரு தோட்டக்காரனாகிவிட்டால் எவ்வளவு அருமையாயிருக்கும்!

கொஞ்சம் இருட்டவேண்டியதுதான் தாமதம், உடனே அம்மா என்னைத் தூங்குவதற்காகப் படுக்கைக்கு அனுப்பிவிடுகிறாள்.

திறந்திருக்கும் என் ஜன்னல்வழியாக, ரோந்துக்காரன் தெருவில் மேலுங் கீழும் நடப்பதை நான் பார்க்க முடிகிறது.

வீதியில் மனித சஞ்சாரமற்று இருள் கவிந்திருக்கிறது. தெருவிளக்கு, சிவந்த நெற்றிக் கண்ணையுடைய ராட்சதன் போலத் தோற்றமளிக்கிறது.

தலையாரி தன் கை விளக்கை வீசிக் கொண்டு, தன்னுடைய நிழலே தனக்குத் துணையாக நடந்து செல்கிறான். அவன் ஜன்மத்தில் ஒரு முறைகூடப் படுக்கச் சென்றது கிடையாது!

என் லாந்தலினால் நிழல்களை வேட்டையாடிக்கொண்டு, இரவு முழுவதும் தெருத் தெருவாக நடந்துகொண்டேயிருக்க, நான் ஒரு காவற்காரனாகிவிட்டால் எவ்வளவு ருசியாயிருக்கும், வாழ்க்கை!

*

ஆஹா! பெரியவன்!

ஐயே அம்மா! உன் பாப்பா சுத்த அசடு! அவள் குழந்தைத் தனத்தை என்னவென்பேன்!

நட்சத்திரங்களுக்கும் தெரு விளக்குகளுக்கும்கூட வித்தியாசம் தெரியவில்லை; அவளுக்கு!

கூழாங்கற்களை வைத்துக் கொண்டு நாங்கள் சாப்பிடும் விளையாட்டு விளையாடினால், நிஜமாகவே அவை தின்பண்டங்களாகும் என்று நினைத்து, அவற்றையெல்லாம் அவள் வாயில் திணித்துக் கொள்ளப் பார்க்கிறாள்.

அவள் எதிரே புத்தகத்தைத் திறந்து அ, ஆ, இ, படிக்கச் சொன்னால், இதழ்களைக் கிழித்துவிட்டு, எதையோ கண்டுவிட்டவள் போல இடி இடியென்று சிரிக்கிறாள்! இதுதான் உன் பாப்பா படிக்கிற அழகு!

கோபமாகத் தலையசைத்து அவளைத் திட்டி, 'போக்கிரி!' என்றழைத்தால் அதை ஒரு பெரிய வேடிக்கையாகவே நினைத்துக்கொண்டு சிரிக்கிறாள், அவள்!

அப்பா ஊரிலில்லை என்றுதான் எல்லோருக்கும் தெரியுமே; நான் வேடிக்கைக்காக 'அப்பா!' என்று கத்தினால் அவள் ரொம்ப உற்சாகத்துடன் சுற்றிலும் விழித்துப்பார்த்து, அப்பா இங்கு இருக்கிறார் என்றே நினைத்துக் கொள்கிறாள்!

அழுக்குத் துணிகளை எடுத்துப்போக நம் வண்ணான் கழுதைகளை ஓட்டி வரும் போது, நான் அவற்றை வரிசையாக நிறுத்தி விளையாட்டாகப் பள்ளிக்கூடம் நடத்தும்போது, 'நான்தான் வாத்தியார்!' என்று அவளை மிரட்டினால், அவள் அகாரணமாய்க் கதறிக்கொண்டு, 'அண்ணா!' என்று என்னை அழைக்கிறாள்.

உன் பாப்பா அம்புலியைப் பிடிக்க வேண்டுமாம்! அவள் பேசுவதே வேடிக்

கையா யிருக்கிறது: ‘கணேஷ்’ என்பதற்கு ‘காணுஷ’ என்கிறாள்!

அம்மா! உன் பாப்பா சுத்த அசடு; அவள் குழந்தைத் தனத்தை நான் என்ன வென்பேன்!

*

குட்டி மனிதன்

நான் சின்னக் குழந்தை; அதனால் தான் சிறியவன். அப்பாவின் வயது வந்ததும் நானும் பெரியவனாகிவிடுவேன்!

வாத்தியார் வருவார். "நேரமாகிறது; உன் சிலேட்டையும் புத்தகங்களையும் கொண்டுவா!" என்பார்.

"நான் அப்பாவைப் போல் பெரியவனாகிவிட்டேன். இது உமக்குத் தெரியவில்லையா? எனக்கு இனி பாடமாவது, கீடமாவது! — ஒன்றும் கிடையாது!" என்பேன்.

வாத்தியார் ஆச்சரியத்துடன், "ஆம், அவனே வளர்ந்து விட்டான். அவன் விரும்பினால் புத்தகங்களை மூட்டைகட்டி வைத்துவிடலாம்!" என்பார்.

அழகாய் உடை தரித்துக்கொண்டு நான் ஜன நெருக்கடி அதிகமாயுள்ள சந்தைக்குள் செல்வேன்.

மாமா என் பின்னால் ஓட்டமாகவந்து, "குழந்தாய்! நீ கூட்டத்திலே தவறிப் போய்விடுவாய்! எங்கே, நான் உன்னைத் தூக்கிக் கொள்கிறேன், வா!' என்பார்.

"அப்பாவைப் போல் பெரியவனாகி விட்டேன், இதுகூட உனக்குத் தெரியவில்லையா, மாமா?" என்று நான் பதிலளிப்பேன்.

மாமா சொல்வார்: "ஆமாம், அவன் தன் இஷ்டம்போல எங்கு வேண்டுமானாலும் தனியாகவே செல்லலாம்; அவனே பெரியவன்!"

அம்மா குளித்துவிட்டு வரும்போது நான் ஆயாளுக்குப் பணம் கொடுப்பதைப் பார்ப்பாள்-என் சாவியினால் பெட்டியைத் திறக்கவும் எனக்குத் தெரியாதா?

"துஷ்டப் பயலே! இது என்ன வேலையடா?" என்று மிரட்டுவாள் அம்மா.

நான் சொல்வேன்: "அம்மா! உனக்குத் தெரியவில்லையா? நானும் அப்பாவைப்போல் பெரியவனாகி விட்டேன்!

ஆயாளுக்கு நான் வெள்ளிப் பணம் கொடுக்க வேண்டும்.''

அம்மா தனக்குள் சொல்லிக் கொள்வாள்: ''ஆம், அவனும் பெரியவனே; யாருக்கு வேண்டுமானாலும் அவன் காசு கொடுக்கலாம்.''

புரட்டாசி மாதத்து 'பூஜைவிடுமுறை' யின்போது அப்பா ஊரிலிருந்து வருவார். நான் இன்னும் சின்னக் குழந்தை யாகவே இருப்பேன் என்று எண்ணிக் கொண்டு பட்டணத்திலிருந்து எனக்குப் பொடி ஜோடுகளும், சின்னச் சின்ன பட்டுச் சட்டைகளும் வாங்கி வருவார்.

''அப்பா அதையெல்லாம் அண்ணாவுக்குக் கொடுத்துவிடு: ஏனென்றால் நான் உன்னைப்போல் பெரியவனாகி விட்டேன்!'' என்பேன்.

அப்பா யோசித்துக் கொண்டே சொல்வார்: ''ஆம், அவன் பெரியவனாகி விட்டான். தனக்கு வேண்டிய துணிகளை அவன் தன் இஷ்டம் போல் வாங்கிக் கொள்ளலாம்!''

*

பன்னிரண்டு மணி

ஓ அம்மா! பாடம்படித்தது போதுமே; இன்று காலை முழுவதும் புத்தகத்தை வைத்துக் கொண்டுதானே உட்கார்ந்திருக்கிறேன்?

மணி பன்னிரண்டுதானே ஆகிறது என்கிறாய்! அதற்குமேல் ஆகவில்லை என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் பன்னிரண்டு மணிக்கே மாலைப் பொழுதாகி விட்டதாக உன்னால் கற்பனை செய்து கொள்ள முடியாதா, அம்மா?

என்னால் ரொம்பச் சுலபமாக முடியுமே! அதோ, அங்கே நெற்கதிர்களின் மேல் சூரியன் சாய்ந்து விட்டதாகவும், செம்படவக் கிழவி குளத்தங்கரையில் இராச் சாப்பாட்டுக்கு வேண்டிய கீரை, கிழங்குகளைப் பிடுங்கிக் கொண்டிருப்பதாகவும் நான் சுலபமாகக் கற்பனை செய்து கொள்வேன்!

கண்களை மூடிக்கொண்டு விட்டால் போதும்; மதர் மரத்தடியில் நிழலடர்ந்து

இருட்டாகி வருவதாயும், குளத்தில் ஜலம் கருநீல வர்ணத்துடன் மின்னுவதாயும் நினைத்துக் கொண்டுவிட முடிகிறது!

பன்னிரண்டு மணி இரவில் வரும் என்றால், இரவு மட்டும் ஏன் பன்னிரண்டு மணிக்கே வரக்கூடாது?

*

ஆசிரியர்

இதோ அப்பா நிறையப் புத்தகங்கள் எழுதிக் குவிக்கிறார் என்று நீ சொல்கிறாய். ஆனால் அவர் எழுதுவது ஒன்றுமே எனக்குப் புரியவில்லையே!

சாயந்திரமெல்லாம் உனக்கு ஏதோ படித்துக் காண்பித்துக் கொண்டிருந்தாரே. நிஜமாகவா அவர் சொன்னதெல்லாம் உனக்குப் புரிந்தது?

எவ்வளவு அழகான கதைகளெல்லாம் எங்களுக்கு நீ சொல்கிறாய் அம்மா! என்ன அதிசயம்! அப்பாவுக்கு அது 'மாதிரியெல்லாம் எழுதத் தெரியாதோ?' என்று நான் அதிசயப்படுகிறேன்.

ராட்சதர்களைப் பற்றியும், தேவதைகளைப் பற்றியும், அரசிளங் கன்னிகளைப் பற்றியும் அவர் தன் தாயிடமிருந்து கதைகள் கேட்டதே இல்லையா? அவற்றையெல்லாம், ஐயோ! அவர் மறந்து விட்டாரா?

ஒவ்வொரு நாளும் அவர் குளிக்க வருவதற்கு வெகு நேரமாகி விடுகிறது.

அப்போதெல்லாம் அவரை நீ நூறுமுறை அழைக்க வேண்டியிருக்கிறது.

சமைத்ததெல்லாம் சூடாறிப் போகாமல் பார்த்துக்கொண்டு, அவர் சாப்பிட வருவாரோ என்று நீ ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கிருய். அவரோ அந்த நினைவு கூட இல்லாமல் நெடுக எழுதிக்கொண்டே இருக்கிருர்.

அவர் புத்தகம் எழுதும் விளையாட்டையே எப்போதும் விளையாடிக்கொண்டிருக்கிருர்!

ஆனல், நான் மட்டும் விளையாடலாம் என்று அப்பாவின் அறைக்குள் நுழைந்தால், "என்ன துஷ்டப் பிள்ளை, இது!" என்று நீ என்பின்னல் விரட்டிக்கொண்டு வருகிருய்!

நான் ஒரு சிறு சத்தம் செய்தாலும் சரி, "இஷ்....! அப்பா வேலையில் ஆழ்ந்திருக்கிருரே, தெரியவில்லையா?" என்று அதட்டுகிருய்!

சும்மா எழுதிக்கொண்டே, எழுதிக் கொண்டே இருப்பதில் என்னதான் வேடிக்கை இருக்கிறதோ!

அப்பாவின் பேனவையோ பென் சிலேயோ எடுத்துக்கொண்டு, அவருடைய புத்தகத்தில் நானும் அவரைப் போலவே,- அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ என்று எழுதினல், நீ ஏன் அம்மா என்மேல் எரிந்து விழுகிருய்? அவர் எழுதும்போது மட்டும் நீ வாயைத் திறப்பதே இல்லையே?

அப்பா அப்படி கத்தை கத்தையாகக் காகிதத்தை வீணுக்குவதை நீ கொஞ்சங் கூடப் பொருட்படுத்துவதில்லை, அம்மா!

ஆனல் நான் கப்பல் செய்வதற்காக ஒரே ஒரு காகிதம் எடுத்தாலும், "குழந்தாய்! உன்னல் எனக்கு எத்தனை தொல்லை?" என்கிருய்!

காகிதம் முழுவதும், இரண்டு பக்கங் களிலும் கறுப்புக் கறுப்பாகக் கிறுக்கி, எத்தனையோ இதழ்களைக் கெடுத்துக் குவிக்கிருரே அப்பா, அது மட்டும் என்னவாம், அம்மா?

☆

துஷ்டத்தனமுள்ள தபாற்காரன்

❀❀ அங்கே கட்டாந் தரையில் உட்கார்ந்துகொண்டு, ஏன் அப்படி அசையாமல் மௌனமாக இருக்கிறாய்? சொல் அம்மா, என் கண்ணல்லவா?

பார்! திறந்த ஜன்னல் வழியாக மழையடித்து உன்னை முழுவதும் நனைத்துவிட்டது. நீ அதை லட்சியம் செய்யவில்லையே!

சேகண்டி நான்கு மணி அடித்ததே, கேட்டாயா? அண்ணா பள்ளிக்கூடத்திலிருந்து வரும் வேளையாகிவிட்டது.

அம்மா உனக்கு என்ன வருத்தம்? ஏன் அப்படி உட்கார்ந்திருக்கிறாய்? இன்று அப்பாவிடமிருந்து உனக்குக் கடிதம் வரவில்லையா?

அனேகமாக, ஊரிலிருக்கும் அத்தனை பேருக்கும் தன் பை நிறையக் கடிதங்கள் எடுத்துக்கொண்டு தபாற்காரன் வந்ததை

நான் பார்த்தேன். அப்பாவின் கடிதங்களை மட்டும் அவன், தான் படிப்பதற்காக வைத்துக்கொண்டு விடுகிறான்! அந்தத் தபாற்காரன் ஒரு துஷ்டன்—ஆமாம், எனக்கு நிச்சயமாகத் தெரியும்!

என் கண்ணான அம்மா! நீ அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை.

நாளைக்குப் பக்கத்துக் கிராமத்தில் சந்தை கூடும் நாள். நீ வேலைக்காரியை அனுப்பி, பேனாக்களும் காகிதங்களும் வாங்கி வரச்சொல்.

அப்பா உனக்கு எழுதும் கடிதங்களையெல்லாம் நானே எழுதிவிடுகிறேன்; ஒரு பிழைகூட உன்னால் அவற்றில் கண்டு பிடிக்க முடியாது!

'அ'விலிருந்து 'ஊ'வரையிலும் அத்தனை எழுத்தும் நான் எழுதிவிடுவேன்!

ஆனால், அம்மா! நீ ஏன் சிரிக்கிறாய்? அப்பாவைப்போல் அவ்வளவு அழகாக எனக்கு எழுதத் தெரியாது என்று நினைக்கிறாயா?

காகிதத்தில் நேராக முதலில் கோடு இழுத்துக்கொண்டு, எழுத்துக்களை யெல்

லாம் பெரிதாக, ரொம்ப அழகாக எழுதுவேனே!

கடிதம் எழுதியானதும் நம் அசட்டு அப்பாவைப்போல் அந்தக் கொடிய தபாற்காரன் பையில் போட்டுவிடுவே னென்று நினைக்கிறாயா? — ஊஹூம், மாட்டேன்!

தாமதம் செய்யாமல் நானே அதை எடுத்துக்கொண்டு உன்னிடம் வருவேன். ஒவ்வொரு எழுத்தாக நான் எழுதியிருப்பதைப் படிக்க உனக்குத் துணை செய்வேன்!

நிஜமாகவே, நல்ல நல்ல கடிதங்களை யெல்லாம் உன்னிடம் கொடுக்க அந்தத் தபாற்காரனுக்கு இஷ்டமே இல்லை; எனக்குத் தெரியுமே!

வீரன்

நினை அம்மா! நாம் இருவரும் பயணஞ் செல்வதாயும், அப்போது நாம் முன்பின் பார்த்திராத பயங்கரமான ஒரு பிரதேசத்தின் வழியே சென்று கொண்டிருப்பதாயும் பாவனை பண்ணிக் கொள். நீ பல்லக்கில் ஏறிச் செல்கிறாய். உன் பக்கத்தில் நான் ஒரு செங்குதிரை மேலேறி 'திராட்' போட்டு வருகிறேன்.

சூரியன் மேற்கே சாய்ந்துவிட்டான்; அந்தி நேரம். நம் முன் ஜோரதிகிப் பாலை நிலம் உயிரற்று ஒளியற்றுப் பரவி நிற்கிறது. அந்தப் பிராந்தியமே மனித சஞ்சாரமற்ற பாழ் நிலம்.

நீ நெஞ்சில் பயத்துடன், "நாம் எங்கு வந்திருக்கிறோம் என்றுகூட எனக்குத் தெரியவில்லையே!" என்கிறாய்.

"அம்மா, நீ பயப்படாதே!" என்கிறேன் நான்.

உடம்பைக் குத்தும் கூரிய கோரைப் புற்கள் மண்டிய அந்தப் பாலையின் நடுவே

குறுகிய பாதையொன்று ஒளிந்து மறைந்து செல்கின்றது. அந்த விசாலமான வெளியிலே பெயருக்கு ஒரு மரம் கூடக் காணப்படவில்லை. அவை கிராமத்திலிருக்கும் தொழுவங்களுக்குத் திரும்பிவிட்டன.

மண்ணிலும் விண்ணிலும் இருள் மண்டி ஒளி மங்கி வருகிறது; எந்தத் திசையில் செல்கிறோம் என்றுகூடச் சொல்ல முடியவில்லை.

அப்போது நீ சட்டென என்னை அழைத்து, என் காதோடு, "பக்கத்திலே ஏதோ வெளிச்சம் தெரிகிறதே, அது என்ன?" என்று கேட்கிறாய்.

நீ கேட்டதுதான் தாமதம், ஒரு பயங்கரக் கூச்சல் வானைப் பிளந்து கொண்டு வருகிறது; கண்ணுக்குத் தெளிவற்ற பல உருவங்கள் நம்மை நோக்கி விரைந்து வருகின்றன.

பல்லக்கின் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டு, இஷ்டதெய்வங்களின் பெயரைச் சொல்லி நீ பிரார்த்தனை செய்கிறாய்!

பல்லக்கைத் தூக்கிக்கொண்டு வந்த ஜவான்கள் பயத்தினால் வெடவெடத்துக் கொண்டு முட் புதர்களுக்குள் ஓடி ஒளிந்து கொள்கிறார்கள்.

"அம்மா, நீ பயப்படாதே! இதோ நான் இருக்கிறேன்!" என்று உனக்குத் தைரியம் சொல்கிறேன், நான்.

கைகளில் நீண்ட தடிகளுடனும், அலங்கோலமான பரட்டைத் தலைமயி ருடனும் அவர்கள் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

"ஏ, துஷ்டர்காள்! ஜாக்கிரதை! இன்னும் ஓர் அடி முன் வைத்தீர்களானால் நீங்கள் பிணமாவீர்கள்!" என்று நான் கர்ஜிக்கிறேன்.

அவர்கள் இன்னொரு பயங்கரக் கூச்சலுடன் நம்மை நோக்கிப் பாய்ந்து வருகிறார்கள்.

நீ என் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "என் அருமை மகனே! உனக்குப்புண்ணியமுண்டு, அவர்களுடன் கை கலக்காதே, அப்பா!" என்கிறாய்.

"அம்மா. நீ பார்த்துக்கொண்டே யிரு!" என்கிறேன், நான்.

நாலு கால் பாய்ச்சலில் என் குதிரையைத் தட்டிவிடுகிறேன்; கத்தியும் கேடயமும் ஒன்றோடொன்று உராய்ந்து சப்திக்கின்றன.

எங்களுக்கிடையே நடந்த சண்டையின் கோரத்தைப் பல்லக்கிலிருந்தபடியே உன்னால் கவனித்திருக்கக் கூடுமானால் உனக்குக் குலை நடுக்கம் உண்டாகியிருக்கும்—அத்தனை கோரம்!

அவர்களில் பலர் செத்தோம், பிழைத்தோம் என்று ஓடுகிறார்கள். அநேகர் கண்டதுண்ட மாக்கப்பட்டுக் கீழே உருளுகிறார்கள்.

பல்லக்கில் தன்னந் தனியே உட்கார்ந்திருக்கும் நீ, உன் மைந்தன் இதற்குள் இறந்து போயிருப்பான் என்றே எண்ணிக் கொண்டிருப்பாய் என்பது தான் எனக்குத் தெரியுமே!

ஆனால் நானோ ரத்தக்கறை படிந்த உடம்புடன் உன்னிடம் வந்து, "அம்மா! சண்டை முடிந்துவிட்டது" என்றேன்.

பல்லக்கிலிருந்து இறங்கிவந்து என்னை முத்தமிட்டு மார்போடணைத்துக்கொண்டு நீ சொல்லிக் கொள்கிறாய்; "என் மகன் எனக்கு வழித்துணையாக வந்திராவிட்டால் என் கதி என்னவாகியிருக்குமோ!"

ஓராயிரம் சுவையற்ற சம்பவங்கள் என்றுந்தான் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. தற்செயலாக ஏன் இப்படியும் ஒரு நாள் உண்மையாகவே நடக்கக்கூடாது? புத்தகத்தில் வரும் கதையைப்போலவே இருக்குமில்லையா?

அண்ணா சொல்வான்: "ஆஹா, அப்படியா! அவன் சோணி என்றல்லவா நான் நினைத்திருந்தேன்?"

நம் கிராமத்து ஜனங்கள் மலைத்துப் போய், "அந்தப் பிள்ளை தன் தாயோடு சென்றது அவள் அதிர்ஷ்டமேயல்லவா?" என்றுதானே சொல்லிக்கொள்வார்கள்?

முடிவு

அம்மா! உன்னைப் பிரிந்து செல்லும் வேளை வந்துவிட்டது; நான் போகிறேன். இருள் மங்கி வரும் ஏகாந்தம் நிறைந்த வைகறையில், படுக்கையிலிருக்கும் உன் பாப்பாவை அணைத்துக்கொள்ள நீ ஆவலுடன் கைகளை நீட்டும்போது, "உன் பாப்பா அங்கே இல்லை!" என்று சொல்வேன்—அம்மா, நான் போகிறேன்!

இளந் தென்றலாக மாறி உன்னைத் தழுவி விளையாடுவேன்; நீ நீராடும் ஜலத்தில் சிறு அலைகளாகத் துள்ளி வருவேன்; தவழ்ந்து வந்து உன்னை மீண்டும் மீண்டும் முத்தமிடுவேன்!

புயல் வீசும் இரவில், மழைத்துளிகள் இலைகளின் மேல் படபடவென்று விழும்போது, படுத்துக் கொண்டிருக்கும் நீ அந்த ஓசையில் என் ரகசியக் குரலைக் கேட்பாய். திறந்த ஜன்னலின் வழியே தோன்றும் மின்னலினூடே என்னுடைய சிரிப்பு கலந்து வந்து உன் அறைக்குள் மின்னலிடும்.

உன் குழந்தையை நினைத்துக் கொண்டு இரவு நெடுநேரம்வரை கண்ணயராமல் படுத்திருக்கும் உனக்கு, நட்சத்திர விண்ணிலிருந்து நான், "தூங்கம்மா தூங்கு!" என்று தாலாட்டுப் பாடுவேன்!

அம்புலியின் வழிதப்பித் திரியும் கதிர்களின்மேல் ஏறி மிதந்துவந்து, உனக்குத் தெரியாமல் உன் படுக்கையில் விழுந்து, தூங்கும் உன் மார்பில் நான் தலை சாய்த்துப் படுப்பேன்!

கனவாகவந்து, உன் கண்ணிடுக்கின் வழியே உன்னுடைய துயிலின் ஆழத்தில் நான் தோன்றுவேன். திடுக்கிட்டெழுந்து நீ சுற்றும் முற்றும் பார்க்கும்போது, கண் சிமிட்டி மின்னிச் செல்லும் மின்னும் பூச்சியைப் போலப் பறந்து சென்று இருளில் மறைந்து விடுவேன்!

'பூஜா' விழாக் கொண்டாட்டத்தின் போது, அயலகத்துக் குழந்தைகள் நம் வீட்டில் ஓடி விளையாடுவார்கள். அப்போது குழலின் மதுரகானத்தில் கலந்து உன் இதயத்தில் இன்னிசையாக நாள் முழுவதும் நான் துடித்து நிற்பேன்!

'பூஜை'ப் பரிசுகளை எடுத்துக்கொண்டு அருமைச் சித்தி நம் வீட்டுக்கு வந்து, "அடி அக்கா! நம் குழந்தை எங்கே?" என்று கேட்பாள். அம்மா, நீ கனிந்த குரலில் பதிலளிப்பாய்: "என் கண்ணுள் கருமணியாக அவன் இருக்கிறான்; என் உடலிலும் ஆன்மாவிலும் அவன் ஒன்றி விட்டான்!"

*

மீண்டும் அழைப்பு

அந்த இருண்ட இரவில், அவள் எங்களைப் பிரிந்து சென்றாள்; அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுதும் இரவு: அதே இருட்டு. "என் செல்வமே, திரும்பி வா! உலகம் உறங்கி விட்டது, நட்சத்திரங்கள் நட்சத்திரங்களையே இமை கொட்டாமல் பார்க்கும் இவ்வேளையில் நீ ஒரு நிமிஷம் இங்கு வந்து செல்வாயாகில் அது யாருக்கும் தெரிந்துபோய்விடாது!" என்று நான் அவளை அழைக்கிறேன்.

மரங்கள் மொட்டு விட்டிருந்தபோது, வசந்தத்தின் இதழ்விரியா இளமையிலே, அவள் எங்களைப் பிரிந்தனள்.

இன்று அம்மொட்டுகள் மலர்ச்சியின் சிகரத்தை அடைந்துவிட்டன. "என் செல்வமே, திரும்பி வா! தங்களுடைய கண்மூடித்தனமான வெறி விளையாட்டிலே குழந்தைகள் மலர்களைப் பறித்து வாரியிறைத்து ஆரவாரம் செய்

கிறார்கள். நீ வந்து ஒரே ஒரு சிறு மலர் எடுத்துக் கொண்டு சென்றால், என் கண்ணே, அதனால் யாருக்கும் நஷ்டம் வந்துவிடாது!'' என்று நான் அவளை அழைக்கிறேன்.

அன்று விளையாடியவர்கள் இன்றும் தான் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். என்னே, வாழ்வின் ஊதாரித்தனம்!

அவர்களுடைய மழலைப் பேச்சைக் கேட்ட வண்ணம், "என் செல்வமே, திரும்பி வா! அம்மாவின் உள்ளத்தில் அன்பு பொங்கி வழிகிறது. அவளிட மிருந்து ஒரு சின்னஞ் சிறு முத்தத்தைத் திருடிச்செல்ல நீ வருவாயானால், அதைக் கண்டு யாரும் பொறாமை கொள்ள மாட்டார்கள்! என்று அவளை நான் அழைக்கிறேன்.

*

முதல் மல்லிகை

ஆ. மல்லிகை மலர்கள்! இந்த வெண்ணிற மல்லிகை மலர்கள்!

குழந்தைப் பருவத்தில் இந்த வெண்ணிற மலர்களை, மணமுள்ள இந்தமல்லிகைகளை, என் கை நிறைய அள்ளிக்கொண்ட அந்த முதல் நாளை நான் மறக்கவில்லையென்றே தோன்றுகிறது.

கதிரவனின் ஒளி, ஆகாசம், பசுமை நிறைந்த பூமி—இவற்றை நான் கண்டு இன்புற்றிருக்கிறேன்.

நள்ளிரவைக் கிழித்துக் கொண்டு வந்த ஆற்றின் தண்ணொலியைக் கேட்டு ஆனந்தித்திருக்கிறேன்.

நாயகனை வரவேற்க முகத்திரையை விலக்கி இன்முகம் காட்டும் மணப் பெண்ணைப்போல, காட்டிலே செல்லும் சாலையின் திருப்பத்தில். இலையுதிர் காலத்து அஸ்தமான அற்புதம் என்னைத் தேடிவந்து எனக்குக் காட்சி யளித்திருக்கிறது.

எனினும், சின்னஞ் சிறு குழந்தையாக, நான் என் கை நிறைய முதல் முதலாக அள்ளிக்கொண்ட வெண்ணிற மல்லிகை, என்னுடைய நினைவில் இன்றும் மங்காத இனிமையாகவே ஜ்வாலையிடுகிறது !

என் வாழ்நாளில் எத்தனையோ இன்ப தினங்கள் வந்து போயிருக்கின்றன. உல்லாசப் பிரியர்களுடன் நான் எத்தனையோ இரவுகள் விழாக் கொண்டாடிச் சிரித்து மகிழ்ந்திருக்கிறேன்.

மழையின் மங்கிய நாட்களில் மனம் போனபடி பாடிக்கொண்டு காலை நேரத்தைக் கழித்திருக்கிறேன்.

காதற்கரங்கள் தொடுத்த பாகுல மலர் மாலைகளை அந்திப்பொழுதில் என் கழுத்திலணிந்து ஆனந்தித்திருக்கிறேன்.

எனினும், குழந்தைப் பருவத்திலே என் சின்னஞ்சிறு கைகளை முதல் முதலாக நிறைத்த புத்தம் புது மல்லிகை மலர்களின் நினைவிலுள்,—ஆஹா ! என் இதயம் இன்றும் இன்புற்றிருக்கிறது !

*

ஆலமரம்

ஓ! ஜடாமுடி தரித்துக் குளத்தங்கரையில் நிற்கும் ஏ, ஆலவிருட்சமே! உன் கிளைகளிலே கூடு கட்டி வாழ்ந்து, பின்னர் உன்னைக் கைவிட்டுச் சென்ற பறவைகளை மறந்ததுபோல அந்தச் சிறு குழந்தையையும் நீ மறந்துவிட்டாயா?

பூமியைத் துளைத்துப் பாயும் உன் வேர் முடிச்சுகளைக் கண்டு வியந்த அண்ணன், ஜன்னலிலேயே பழியாகக் கிடப்பானே, அது உனக்கு நினைவில்லையா?

குளத்திலிருந்து தண்ணீர் மொண்டு செல்லப் பெண்கள் தங்களுடைய குடங்களுடன் வருவார்கள். உன் விசாலமான கரிய நிழல் தண்ணீரில் படிந்து தெரியும் —, ஆம் விழிப்பு வருமுன் தத்தளிக்கும் தூக்கத்தைப் போல!

தங்கப் படுதா நெய்யத் தறியில் ஓயாமலோடும் சின்னஞ்சிறு நாடாக்களைப்போல், சூரியனின் பொற் கிரணங்கள் சிற்றலைகளின் மேல் நர்த்தனம் புரியும்.

நாணல் முளைத்த குளக்கரை யோரமாக, இரண்டு வாத்துகள் தங்களுடைய

பிரதி பிம்பங்களின்மேல் நீந்திச்செல்லும். இவற்றை யெல்லாம் பார்த்தவண்ணம் அசையாமல் உட்கார்ந்துகொண்டு அந்தக் குழந்தை ஏதேதோ சிந்தித்துக் கொண் டிருப்பான்.

இலைகள் சலசலக்கும் உன் கிளைகளிலே புகுந்து விளையாடும் காற்றாகிவிட வேண்டு மென்றும், பொழுது சாயச் சாய நீண்டு வந்து நீரில் படிய உனது நிழலாகிவிட வேண்டுமென்றும், உன்னுடைய உச் சாணிக் கிளையிலே வீற்றிருக்க ஒரு புள்ளின மாகிவிட வேண்டுமென்றும, நிழல்களுக் கிடையிலும் காணல்களுக் கிடையேயும் அந்த வாத்துகளைப்போல மிதந்து வரவேண்டுமென்றும் அவன் ஆசைப்பட்டதை யாராலும் அளவிட முடியாதுதான்!

*

வாழ்த்து!

ஓ! விண்ணின் முத்தத்தை இவ்வுலகிற்குக் கொண்டுவந்த சிறப்புப் பெற்ற கள்ளங்கபடமற்ற இந்த வெள்ளையுள்ளத்தை, மாசு மறுவற்ற இந்தச் சின்னஞ் சிறு ஆத்மாவை, வாழ்த்துவாயாக!

கதிரவனின் பொன்னொளியை அவன் விரும்புகிறான்; தாயின் இன்முகத்தைக் காண அவன் ஆசைப்படுகிறான்.

மண்ணை வெறுத்துத் தள்ளவும், பொன்னைத் தேடி யலையவும் அவன் பழகவே இல்லை.

அவனை உன் இதயத்தோடு அணைத்து வாழ்த்துவாயாக!

நூற்றுக்கணக்கான குறுக்கு வீதிகள் மலிந்து கிடக்கும் இவ்வுலகிற்கே அவன் வந்துவிட்டான்.

இந்தக் கும்பலில் அவன் எப்படித் தான் உன்னைத் தேர்ந்தெடுத்து, உன் இல்லத்துக்கு வந்து, உன் கை தொட்டுத் தனக்கு வழி காட்டும்படி கேட்டுக் கொண்டானோ, தெரியவில்லை!

இனிய மழலையை வாரி யிறைத்துக் கொண்டும், சிரித்துக்கொண்டும் அவன் உன்னையே பின் தொடர்ந்து வருவான்.

அவனது விசுவாசத்தை இழந்து விடாதே; நேர்மையான வழியில் நடத்திச் செல்: அவனை நீ வாழ்த்துவாயாக!

'கீழே அலைகள் சீறி எழுந்தபோதிலும், கருணை நிறைந்த காற்று மேலிருந்து வந்து பாய்மரங்களை நிரப்பி சாந்தி நிறைந்த விண்ணுக்கே அவன் வாழ்க்கைப் படகை அழைத்துச் செல்லட்டும்' என்று நீ அன்போடு அவன் தலையை வருடி இறைவனைப் பிரார்த்திப்பாயாக!

உன் அவசரத்தில் அவனை மறந்து விடாதே; உன் இதயத்தினுள் அழைத்துக்கொள். அவனையே நீ ஆசீர்வதி!

*

அன்பளிப்பு

ஓ என் குழந்தாய்! உலக நீரோட்டத்தில் நாம் ஒதுங்கி வருகிறோம்; என்னுடைய நினைவாக உனக்கு ஏதாவது பரிசு அளிக்க நான் விரும்புகிறேன்.

நம் வாழ்க்கை பிரிந்துவிடும்; நம் அன்பு மறந்தே போய்விடும்!

ஆயினும், உன் இதயத்தை என் பரிசுகளைக் கொண்டு கவர்ந்து விடக்கூடும் என்று நம்ப நான் அவ்வளவு மூடனல்ல.

உன் வாழ்க்கை இளமையில் சுழல்கிறது; உன்னுடைய பாதையோ நெடுந்தொலை. நான் உனக்குக் கொண்டுவரும் அன்பமுதத்தை ஒரே மூச்சில் குடித்துவிட்டு, என்னைத் திரும்பிப் பாராமலே ஓடிவிடுகிறாய், நீ!

உன் விளையாட்டும் விளையாட்டுத் தோழர்களுமே உனக்கு; எனக்கு உன் எண்ணங்களில் இடமோ, உன்னுடைய நேரத்தில் ஒரு பகுதியோ அளிக்கா

விட்டால், அதனல் என்ன முழுகிப் போய்விட்டது?

கழிந்துபோன நாட்களை எண்ணிப் பார்க்கவும், கைகள் நழுவ விட்டதைக் கருத்திலே வைத்துச் சீராட்டவும் என் முதுமைப் பிராயத்திலே எனக்கு வேண்டிய அவகாச மிருக்கிறது.

வேகமாக முன்னேக்கிப் பாய்ந்து, தடைகளை யெல்லாம் தகர்த்தெறிந்து கொண்டு, ஆனந்தமாகப் பாடிச் செல்கிறது நதி. ஆனல் மலையோ சலனமற்று, பழைய நாட்களை நினைவு கூர்ந்து, தன் அன்பினல் மட்டுமே நதியைப் பின்பற்றிச் செல்கிறது.

*

எனது பாடல்

ஒரு அன்பின் நேசக் கரங்கள் போல, என் குழந்தாய்! இந்த என் பாடலானது தன் நாத அலைகளால் உன்னைத் தழுவிக் கொள்ளும்.

என் பாடல் உன்னுடைய நெற்றியைத் தொட்டு, அங்கே ஓர் ஆசி முத்தமெனவே விளங்கும்.

உனது தனிமையில், உன் அருகில் அமர்ந்து உன்னுடைய காதில் இரகசியமாக ஒலித்துக் கொண்டிருக்கும்; ஜன நெருக்கடியில் இருக்கும்போது, உன்னையே சூழ்ந்து ஒரு தனிமையை எழுப்பி, தனிமையில் இனிமை தந்து உன்னைக் காப்பாற்றும்.

என் பாடல் உனது கனவுகளுக்கு இரட்டைச் சிறகுகளாக அமைந்து, யாரும் கண்டறியாத அதிசய உலகுக்கு உன் இதயத்தை இழுத்துச் செல்லும்.

உன் வாழ்க்கைப் பாதையிலே இருள் கவிந்திருக்கும்போது, உனது தலைக்கு

மேல், வழிகாட்டும் ஜோதிச் சுடராகவே மின்னிக்கொண்டு வரும், எனது பாடல்.

எனது பாடல் உன் கண்களின் கரு மணிகளில் கலந்து எந்த விஷயத்தையும் ஆழமாய் ஊடுருவிப் பார்க்கும் சக்தியை உனக்கு அளிக்கும்.

மரணத்தில் என் குரல் ஓய்ந்து போனாலும், எனது பாடல் உன் இதயத்தில் இடையறாது ஜீவநாடியாகவே ஒலித்துக்கொண்டிருக்கும்.

*

குழந்தைத் தெய்வம்

[illegible] சச்சரவிடுவார்கள், சண்டை செய்வார்கள், சந்தேகப்படுவார்கள், நம்பிக்கையிழப்பார்கள்—அவர்களுடைய சண்டைகளுக்கு ஒரு விடிவில்லையே!

என் குழந்தாய்! அவர்களுக்கிடையே உன் வாழ்வு ஒரு சுடரொளியாகவே வந்து விளங்கட்டும். அமைதியாகவும் தூய்மையாகவும் ஒளி வீசி, ஆனந்த மௌன அமைதியிலே அவர்களை ஆழ்த்தட்டும்!

தங்கள் பேராசைகளாலும் பொறாமைகளாலும் அவர்கள் கொடியவர்களாகி விட்டனர். அவர்களுடைய வார்த்தைகளோ, ரத்த வெறி கொண்ட, மறைந்து கிடக்கும் கொடிய கத்திகளே!

கோபத்துடன் முகம் சுளிக்கும் அவர்களுடைய கொடிய நெஞ்சங்களுக்கிடையே, என் குழந்தாய், நீ சென்று கம்பீரமாய் நில்! பகல் நேரத்துப் பூசலின் மேல் பரவிவரும் அந்தி வேளையின் மன்னிப்பை யருளும் அமைதியைப் போல

அவர்கள் மேல் உன் சாந்தம் நிறைந்த கண்கள் தங்களுடைய மென்னொளியைப் பொழியட்டும்!

என் குழந்தாய்! அவர்கள் உன் திருமுகத்தைக் காணட்டும்! அவர்கள், உன்னைத் தரிசித்துச் சிருஷ்டியின் உண்மைப் பொருளை உணரட்டும்! உன்னைக் காதலிப்பதிலே அவர்கள் ஒருவரை யொருவர் உள்ளன்போடு நேசிக்கப் பழகட்டும்!

ஆதியந்தமற்ற காலத்தின் மடியில் என் மகனே, நீ வீற்றிருப்பாயாக! உதய ஒளியில், உன் இதயமலர் இதழ்விரித்து நிமிரட்டும்! அந்திவேளையில் தலை வணங்கி, உன் தினசரிப் பிரார்த்தனையை அமைதி யுடன் நீ பூர்த்தி செய்வாயாக!

*

கடைசி பேரம்

ஒரு காலையில் கம்பீரமாக ராஜவீதியில் நடந்து சென்றபோது, "வாருங்கள்! என்னைக் கூலி கொள்ளுங்கள்!" என்று கூவினேன்,

கையில் வாளேந்தி, ரதத்தில் ஏறிக் கொண்டு வந்தனன் மன்னவன்.

அவன் என் கையைப் பிடித்துக் கொண்டு, "என் வல்லமையினால் உன்னை நான் என்னுடைய ஊழியனாக்கிக் கொள்வேன்!" என்றனன் மிடுக்குடன்.

அவன் வல்லமை, அந்தோ, என்னிடம் சாயவில்லை! ரதத்திலேறி தன் வழி சென்றனன் ராஜா.

உச்சி கொதிக்கும் நடுப் பகலில், வீடுகள் சாத்திக் கிடந்தன.

வளைந்து வளைந்து சென்ற சந்து வழியே, நான் அலைந்து திரிந்தேன்.

'ஓவியம் தந்த பரிசு'

கதைக் கரும்பு

வித்வான் பத்மாவதி விலை ரூ. 2—0—0

புதிய பாணியில் அமைந்த பலசிறப்பட்ட அரிய சிறு கதைகள்' இனிய எளிய தமிழில் அமைந்திருக்கின்றன. தொடர்ந்து படித்து இன்புறலாம்.

சிறை அனுபவம்

ஆஸ்கார் ஓயில்ட்

தமிழில் V. R. M. செட்டியார் விலை ரூ. 1—4—0

ஆஸ்கார் ஓயில்டின் சிறை அனுபவம், அபூர்வமான சோகநாடகம்:

சிந்தனைகள், வாழ்க்கையைச் சுற்றிக் கொந்தளித்துக் கதறுகின்றன:

நடையோ, ஒப்பற்ற வசன காவிய நடைதான்: எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும், சிந்தனை அலையோவியம்தான். உடனே வாங்கிப் படிக்கவேண்டிய நூல்.

காதலும் கனவும்

ஷெல்லி

தமிழில் T.V. சாமிநாதன் B. Sc. விலை ரூ. 1—0—0

மிகஅருமையான காதல் இலக்கியம்: கற்பனைச்சாட்டை எங்கும் சுழல்கிறது: கவிதையின் ஜாலமும் தெளிவும் தெரிகின்றன. ஷெல்லியின் அற்புதமான சிருஷ்டி,

எங்கள் சிறந்த வெளியீடுகள்

○ **தாகூர் :**

கீதாஞ்சலி	ரூ.	2	0	0
கனி கொய்தல்	ரூ.	2	0	0
வளர்மதி	ரூ.	2	0	0
காதல் கண்கள்	ரூ.	2	8	0
காதற் பரிசு	ரூ.	2	8	0

○ **ஷெல்லி :**

கவிதை மின்னல்	ரூ.	0	12	0
காதலும் கனவும்	ரூ.	1	0	0
செஞ்சி	ரூ.	2	8	0

○ **ஆஸ்கார் ஒயில்ட் :**

குமரியின் சபதம்	ரூ.	1	0	0
சிறை அனுபவம்	ரூ.	1	4	0
கடல் கன்னி (சுகி)	ரூ.	1	8	0

○ **பேராசிரியர் ஆ. முத்துசிவன், M. A.**

அசோகவனம் (கட்டுரைகள்)	ரூ.	2	8	0
கவிதை (விமர்சனம்)	ரூ.	1	0	0
அமரகவி பாரதி	ரூ.	0	6	0

○ **V. R. M. செட்டியார், B. A.**

கவிஞன் குரல்	ரூ.	2	8	0
நான்கு கவிமணிகள்	ரூ.	1	0	0
இலக்கிய விருந்து	ரூ.	2	0	0
காதல் கடிதங்கள் (மாபஸ்ஸான்)	ரூ.	0	4	0

○ **எமர்சன்**

விதியும் - தன்னம்பிக்கையும்	ரூ.	1	8	0

A child is a fragrant fragment of divinity,
a cheering benediction, a green gift
in the hands of Man.

It babbles a free cherub of a free God,
stammering innocence across the
world's wily fangs.

The mother sings an enchanting lullaby ;
the Cherub, steeped in a balmy
slumber, slips into dreamful smiles
of ineffable mystery and incarnation.

Rain smashes to silvery smithereens,—
fragmentary blessings nipping
Famine in the Bud.

Nature astir is voluptuous.

Emotion and imagination subtly interpret Beauty in ambush ; Truth transparently revealed, shivers with illumination, gains the larger heart of the universe, when the Reader becomes least reminiscent of Life's giddy frailties.

— V. R. M. CHETTIAR.